# பாதுகாவலன்
PATHUKAVALAN

பாதுகாவலன்
புதிய விலை
இவ்வாரம் முதல்
தனிப்பிரதி ரூபா 1-50
ஆண்டு சந்தா
தபால் மூலம் தனிப்பிரதி
ரூபா 100/-
வெளிநாட்டு சந்தாவில் மாற்றமில்லை. தொகையாகப் பத்திரிகை பெறுபவர்கள் ஆண்டு சந்தா முற்பணமாக செலுத்துவதாயின் பிரதிக்குரூபா 60/-மட்டுமே.

மலர் 114 இதழ் 32 4-11-1988 (நவம்பர்4-நவம்பர்11) பிரதி ரூபா 1-50 இலங்கையின் ஒரே தமிழ்க் கத்தோலிக்க வார ஏடு

கொழும்பு மறைவட்ட கத்தோலிக்க பொதுநிலையினர் கழகம் மகாசங்கத்தின் கோரிக்கைக்கு ஆதரவு:

# பாராளுமன்றத்தினை உடனே கலைத்துவிட்டு இரு தேர்தல்களையும் ஒன்றாக நடத்துங்கள்

சென்ற திங்கட்கிழமை (ஒக். 31) கொழும்பு மறைமாவட்ட கத்தோலிக்க பொதுநிலையினர் கழகம் கூடியபோது அவர்கள் "பாராளுமன்றத்தைக் கலைத்து சகல கட்சிகளையும் கொண்டபிரதிநிதிகளின் மேற்பார்வையில் பாராளுமன்றத் தேர்தலையும், ஜனாதிபதித் தேர்தலையும் நடத்த வேண்டும்" என்ற மகாசங்கத்தினரின் கோரிக்கைக்கு ஆதரவு தெரிவித்து ஓர் தீர்மானத்தை நிறைவேற்றினர்.

கொழும்பு மறைமாவட்டக் கத்தோலிக்க பொதுநிலையினர் கழகம் ஒக்ரோபர் 31 ஆம் திகதி திங்கட்கிழமை வெளியிட்ட அறிக்கையில் "அடுத்த பாராளுமன்றத் தேர்தலுக்கான திகதியை அரசு உடன் அறிவிக்கவேண்டும்" என்று வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

தற்போது நாட்டிலுள்ள பிரச்சினை நீங்கி நிரந்தர அமைதி உருவாக மகாசங்கத்தினர் முன்வைத்துள்ள யோசனைகள் சரியானவை எனச் சுட்டிக்காட்டி அவற்றை ஜனாதிபதி நடைமுறைப்படுத்த வேண்டும் என்று மேற்படி கழகத்தின் தீர்மானம் வலியுறுத்துகிறது.

"அரசாங்கம் பாராளுமன்றத்தைக் கலைத்துவிட்டு சகல கட்சிகளின் பிரதிநிதிகளையும் கொண்ட மேற்பார்வையாளரின் குழுவைப் பயன்படுத்தி பாராளுமன்றத் தேர்தலையும், ஜனாதிபதி தேர்தலையும் நடத்த வேண்டும்" என்று கேட்டுள்ளனர்.

முதல் சுதேச பேராயரும் இலங்கையின் ஒரே கருதினாலுமான தோமஸ்

## கருதினால் கூறேயின் இறுதிக்கிரிகை

## ருகம - தேவத்தையில் நடைபெற்றது

ஒக். 29 சனிக்கிழமை தம் 86 வது வயதில் இலங்கையின் ஒரே கருதினாலான பேரருள்திரு. தோமஸ் கர்தினால் கூரே காலமானார். அன்னாரது பூதவுடல் நல்லடக்கம் வியாழக்கிழமை தேவத்தைப் பேராலயத்தில் நடைபெற்றது.

ஞாயிற்றுக்கிழமை ஒக். 30 காலை 9 மணி முதல் 11மணி வரை பொரளை, பேராயர் இல்லத்தில் கர்தினாலின் பூதவுடல் மக்களின் அஞ்சலிக்காக வைக்கப்பட்டபோது பல நூற்றுக் கணக்கான மக்கள் அங்கு சென்று தம் அஞ்சலியைச் செலுத்தினார்கள்.

பின்னர் பூதவுடல் கொட்டாஞ்சேனை புனித லூசியாஸ் பேராலயத்தில் வைக்கப்பட்டு மக்கள் ஏராள்மாக திரண்டு வந்து அஞ்சலி செலுத்தினர். புதன்கிழமை காலை வழிபாட்டின் பின் பூதவுடல் தேவத்தை இலங்கை மாதா பேராலயத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டபோது திரளான வாகனங்களில் மக்கள் இறுதியாத்திரையில் கலந்து கொண்டனர்.

அடக்கச் சடங்கு வியாழக்கிழமை மாலை நடைபெற்றபோது திருத்தந்தையின் தூதுவர் பேரருள்திரு. பிரான்சுவா பெக் உட்பட இலங்கையின் அனைத்து ஆயர்களும் திருப்பலியில் பங்குகொண்டனர்.

1901 டிசம்பர் 28ல் நீர் கொழும்பில் பிறந்த கருதினால் ரோமாபுரியில் 1929ஜூன்23ல் குருவாகத் திருநிலைப் படுத்தப்பட்டார். 1946ல் ஆயராகி, 1947ல் முதலாவது சுதேச கொழும்பு மறைமாவட்டப் பேராயராகப் பொறுப்பேற்று 1965 ஜனவரி 10 இல் இலங்கையின் முதலாவது கர்தினாலாக நியமிக்கப்பட்டார். 1976 ஆகஸ்டில் ஓய்வுபெற்று 1977 ஏப்ரல் முதல் தேவத்தையில் வாழ்ந்துவந்தார்.



தோமஸ் கருதினால் கூறே



கருதினால் தோமஸ் கூறேயின் பூதவுடலுக்கு அருள்திரு. ஏனஸ்ட் பொறுத்தோட்ட அடிகளாரும் இரு பௌத்த மதகுருமாரும் இறுதி அஞ்சலி செலுத்துகின்றனர்.

### பாகிஸ்தானில் குரு கொலை

பாக், துறவறசபை சிரேஷ்டர்கள் ஒன்றியச் செயலர் அருள்திரு சிப்ரியன் டயஸ்(60) அவரது இருப்பிடத்திற்கு முன் வைத்து புரட்டாதி 16 இல் 3 ஆயுதம் தாங்கியோரால் கொல்லப்பட்டார். குற்றவாளி தப்பியோடி விட்டார். ஆவணி மாதத்திலிருந்து பாகிஸ்தானில் கொல்லப்பட்ட திருச்சபையினரில் இக்கொலை 4 வது ஆகும்.

### வின்சன் டி போல் நினைவு நாள்

உலகெங்கும் தனிப்பெரும் சேவையாற்றிவரும் புனித வின்சன் டி போல் சபையின் ஓர் அங்கமாகத் திகழும் நெடுந்தீவு புனித வின்சன் டி போல் சபை புனிதரின் நினைவு நாளை 7. 10. 88 வெள்ளிக்கிழமை தனது பங்கில் கொண்டாடியது. அன்று மாலை புனித யுவானியார் ஆலயத்தில் பங்குத் தந்தை M. M. V. அமிர்தகுமார் அவர்களால் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டது.

கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண் விழிப்பது வீண்

## எம் கருத்து

### புதியவைகள்

''ஆண்டவருக்கே தெரியாத விடயம் எது?'' என்று கேட்டால் ''இன்று உலகத்தில் எத்தனை திருச்சபைகள் இருக்கின்றன என்ற விடயமே'' என்று நகைச் சுவைக்காகச் சொல்லுவதுண்டு. இதே போன்ற வினுவுக்கும், விடைக்கும் இலக்கான விடயமாக இன்னுமொன்றைச் சொல்வதானல்; திருச்சபைகளில் எத்தனை பிரிவினைச் சபைகள் இருக்கின்றன என்பதைச் சொல்லலாம்.

இரண்டாம் வத்திக்கான் சங்கத்தின் பின்னர் பிரிவினைச் சபைகளுடன் ஒற்றுமையையும், புரிந்துணர்வையும் வளர்த்துக் கொள்ள வேண்டும் என்று திருச்சபை செயல்பட்டு வருகின்றது. அதே வேளையில் மூலைக்கு மூலை புதுப்புதுப் பெயர்களுடன் மினிக் கிறிஸ்தவ சபைகள் பல தோன்றிக் கொண்டிருக்கின்றன.

உலகின் மூலை முடுக்கெல்லாம் கிறிஸ்தவம் ஏதோ ஒரு உருவத்தில் வேர் விட்டுக் கொண்டிருக்கின்றது என்று கூறுவதற்கு இவை துணை நிற்கலாமே தவிர கிறிஸ்தவத்தின் ஆரோக்கியமான வளர்ச்சி தான் இவை என்று கூறுவதற்கில்லை.

இவர்கள் பைபிளையும், கிறிஸ்துவையும் மையமாகக் கொண்டு போதிப்பது என்னவோ உண்மை போலத் தோன்றினலும் ஒருவரை மற்றவர் கேலி செய்வதும், கிண்டல் செய்வதுமான சாதனைகளை நிகழ்த்தி வருகின்றார்கள் என்பதுவே உண்மை. அன்பை, சமாதானத்தை, தாழ்ச்சியை மையமாகக் கொண்ட கிறிஸ்துவின் போதனைகளை வரிக்கு வரி பிசகின்றிப் பின்பற்றுவதாகக் கூறிக்கொண்டே இவர்கள் பாடும் வசைகளால் ''இது தானு கிறிஸ்தவம்?'' என்று கிறிஸ்தவர்கள் அல்லாதவர்கள் எள்ளி நகையாடும் அளவுக்கு இம்மறைத் தொண்டுகள் அமைந்து விடுகின்றன.

கத்தோலிக்க திருச்சபையானது மணல்மீது கட்டப்பட்ட மண்மாளிகையல்ல, அது விசுவாசம் என்னும் பாறைமீது கட்டிஎழுப்பப்பட்ட கோபுரம். அது உண்டாகி இந்த இருபது நூற்றுண்டுகளிலும் எத்தனையோ வசை அலைகளையும், நீரோட்டங்களையும் சந்தித்து விட்டது. எனவே அவை பற்றி எவரும் கவலைப்பட வேண்டியதில்லை.

கிறிஸ்து வாழ்ந்த காலத்தில் அன்றைய சமூகத்தின் ஆன்ம, உலகியல் பிரச்சினைகளை மையமாகக் கொண்டு அவற்றின் தளைகளில் இருந்து மனிதனின் முழுமையான விடுதலையை மையமாகக் கொண்டே அவருடைய போதனைகள் அமைந்திருந்தன. கிறிஸ்துவின் வழுவாவரத்தைப் பெற்று வழிவழியே வந்த கிறிஸ்துவின் மறையுடலாம் திருச்சபை, இன்றைய சமுதாயத்தின் அடிப்படைப் பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் தன்மையில் விவிலியத்தையும் இறையியலையும் கையாளுகின்றது.

இந்த நல்ல அம்சத்தின் பெருமையை, பெறுமதியை உணராத—உணரவிரும்பாத—மற்றவர்கள் உணர்ந்து கொள்ளக்கூடாத விதத்தில் திருச்சபையின் விவிலியக் கோட்பாடுகளின்மீது சேற்றைவாரி வீசும் கைங்கரியத்தில் இறங்கியுள்ளனர். ''உலகம் முடியும் வரை உங்களோடு இருக்கிறேன்'' என்ற வார்த்தையை ஏற்றுக் கொண்ட நாம் அவரது ஏவுதலால் நிகழ்த்தப்படும் நல்லவைகளையிட்டு கவலைப்பட வேண்டியதில்லை.

ஆனல், உருவாகிவரும் புதியவைகள் கிறிஸ்தவர்கள் அல்லாதவரை தமது விசுவாசிகளாக்குவதில் காட்டும் ஆர்வத்தைவிட கிறிஸ்தவர்களையே பிரித்து எடுப்பதில் காட்டும் ஆர்வமும், அதன் கவர்ச்சியில் இவர்கள் பிரிந்து போவதும்தான் யோசிக்கற்பாலது.

இதற்கு அடிப்படையான காரணங்கள் முக்கியமாக இரண்டு (1) புதியவைகளில் அவர்களை ஈர்க்கும் கவர்ச்சி. (2) கத்தோலிக்கத்தின் மட்டில் அவர்களுக்குள்ள அறியாமை. எனவே இந்தக் கவர்ச்சியையும், அறியாமையையும் இல்லாது செய்வதற்கு கத்தோலிக்க சமூகவியலாளர்கள் தீவிரமாகச் செயல்படவேண்டியுள்ளார்கள்.

இருள் நீக்கி இன்பம் பயக்கும் மருள் நீக்கி
மாசறு காட்சி யவர்க்கு

# மன்னரில் தேசிய இயக்குனர்

இம்மாதம் (ஐப்பசி) 6-ந் திகதி மன்னர் மறைவட்டத்தில் பணியாற்றும் சகல குருக்களுக்கும், துறவிகளுக்கும் ஒரு நாள் கருத்தரங்கு மன்னர் ஆயர் இல்லத்தில் நடைபெற்றது. மன்னர் ஆயர் குருமுதல்வர் உட்பட 30 பேர் பங்குபற்றினர். மறைபரப்புப்பணியைப்பற்றிய இக்கருத்தரங்கை பாப்பரசரின் மறைபோதக சபைகளுக்கான தேசிய இயக்குனர் அருள்திரு. மல்கம் றஞ்சித் அடிகளார் நடாத்தினர். மறைபோதக சபைகளின் அமைப்பு செயற்பாடு என்பன பற்றியும், மன்னர் மறைவட்டத்தில் மறைபரப்புப் பணி பற்றியும் எடுத்துக் கூறப்பட்டது. மேலும் அண்மையில் கண்டியில் நடைபெற்று முடிந்த ஆசியமட்டத்திலான கூட்டத்தின் பலாபலன்களைப் பற்றியும் எடுத்துக்கூறப்பட்டது மாலையில் குழு ஆய்வுகள் நடைபெற்றதுடன் எமது மறைவட்டத்தில் என்ன திட்டங்களை நடைமுறைப்படுத்தலாம் என்பது பற்றியும் தீர்மானிக்கப்பட்டது. இக்கருத்தரங்கை பாப்பரசரின் மறை போதக சபைகளுக்கான மன்னர் மறைவட்ட ஆணைக்குழு அருள்திரு. சூசைப்பிள்ளையின் முயற்சியால் ஒழுங்கு செய்திருந்தது குறிப்பிடத்தக்கது.

தகவல்: அருள்செல்வி
லூயிஸ் மேரி

# கின்னஸ் சாதனை ஏட்டில் கேரளக் குருவானவர்

கேரளத்தில் 1984-ம் ஆண்டு மரணமான பிதா கே. எம். ஜக்கப் என்பவரின் பெயர் கின்னஸ் சாதனை ஏட்டில் இடம் பெற இருக்கிறது. ''கொட்டார அச்சன்'' என மக்களால் அழைக்கப்பட்ட இவர் 86 ஆண்டுகளாக மாதோமா திருச்சபையில் ஆற்றல் வாய்ந்த சுவிசேஷகராக பணிபுரிந்துள்ளார்

பிதா ஜேக்கப் 1903 ஆம் ஆண்டில் திருநிலைப்படுத்தப்பட்டார். மாதோமா திருச்சபையின் தெற்கு மறைமாவட்டத்தில் இவர் பணி புரிந்தார். அவரது முயற்சியாலேயே. பூயப்பள்ளி சாத்தனூர், மார்வன் கோடி, மாரகுளம் ஆகிய இடங்களில் கோயில்கள் கட்டப்பட்டன. தமதுஊரான கொட்டாரத்தில் கிறிஸ்தியன் சிநேகாலயம் என்னும் அனதை இல்லத்தையும், பூயப்பள்ளியில் ஏழைகளுக்காக ஒரு மருத்துவ நிலையத்தையும் ஆரம்பித்தார். ஆயுர்வேத வைத்தியரான இவர் ஏழைகளுக்கு இலவசமான வைத்தியம் செய்தார். சமூக சேவையாளரும், ஏழைப் பங்காளருமான இவர் சகல இன மதத்தவரின் அன்புக்கும், உரியவராயிருந்தார். இறக்கும் போது அவருக்கு வயது 103.

கின்னஸ் ஏட்டின்துணை ஆசிரியர் திரு. நீக்கலஸ் ஹீத் பிறவுண் 1989 ஆம் ஆண்டு வெளிவரும் நூலில் பிதா ஜேக்கப்பின் பெயர் இடம் பெறும் என அறிவித்துள்ளார்.

## குடிவெறிபற்றிய கருத்தரங்கு

குடிவெறியினல் உண்டாகும் தீமைகள்பற்றிய ஒரு கருத்தரங்கு நாகர் கோவில் பெண்கள் கிறிஸ்தவக் கல்லூரியில் ஐூலை 2-ம் திகதி நீலச் சிலுவைச் சங்கத்தின் ஆதரவில் நடைபெற்றது.

அதில் உரையாற்றிய கோட்டாறு மறைவட்டத்தைச் சேர்ந்த பிதா எம். பெஞ்சமின் குடிவெறிக்கு ஆட்பட்டவர் ஒரு நோயாளியைப் போல் நடத்தப்பட வேண்டுமென்றும், அவர்களுக்கு உடல் உள, சமுதாய மட்டத்தில் தேவைப்படும் சிகிச்சை அளிக்கப்படவேண்டுமென்றும் கூறினர்.

குடிப்பழக்கத்துக்கெதிரான போராட்டத்தை வலுப்படுத்தி நீலச் சிலுவைச் சங்கத்தின் செய்தியைப் பரப்பவேண்டும் என்னும் கருத்து கருத்தரங்கில் உணர்த்தப்பட்டது, குருக்கள், வைத்தியர், சமூகவியலாளர், சங்கங்களின் பிரதிநிதிகள் போன்ற பலதரப்பட்ட 50 க்கு அதிகமாக பிரமுகர்கள் இக் கருத்தரங்கிற் கலந்துகொண்டனர்.

## வேளாங்கண்ணியில் பிரதமர்

இந்தியப் பிரதமர் ராஜிவ் காந்தி ஆகஸ்ட் 5ஆம் திகதி வேளாங்கண்ணியிலுள்ள ஆரோக்கியமாதா ஆலயத்தைத் தரிசித்தபோது அவரும் அவரது மனைவி திருமதி சோனியா காந்தியும் ஆலயத்தை அடுத்துள்ள பொருட்காட்சி சாலையையும் பார்வையிட்டனர்.

பிரதமரைத் தஞ்சைப்பேராயர் ஆரோக்கியசாமி அவர்களும் பங்குத் தந்தை பிதா கபிரியேல் அவர்களும் வரவேற்றனர். பேராயர் ஆரோக்கிய மாதாவின் வெள்ளிச் சுரூபமொன்றைப் பிரதமருக்கு அன்பளிப்புச் செய்தார். பாண்டிச்சேரி கல்வி அமைச்சர் திரு. ஜோசவ் மரியதாஸ் அவருக்குப் பொன்னடை போர்த்தினர்.

## பருத்திநகரில் யா.ம.க.ஆ.ச. பொதுக்கூட்டம்

யாழ். மறைவட்ட கத்தோலிக்க ஆசிரியர் சங்க வடமராட்சிக்கிளையின் வருடாந்த பொதுக்கூட்டம் இம்மாதம் 8 ம் திகதி சனிக்கிழமை காலை பருத்தித்துறை புனித தோமையார் றே. க. பெண்கள் பாடசாலையில் ஆசிரியர் திரு. எ. யோசுவா தலைமையில் இடம் பெற்றது. பொதுக்கூட்டம் இறைவணக்கத்துடன் ஆரம்பமாகியது. முதலில் ஆசிரிய திரு. யேசுநாயகம் வரவேற்புரை நிகழ்த்தினர். அதனைத்தொடர்ந்து கரவெட்டி திரு. இருதயக்கல்லூரி அதிபர் திரு. சி. வின்சென்ற், கரவையூர்ப் பங்குத்தந்தை திரு. M. J செல்வநாயகம், பருத்திநகர்ப் பங்குத்தந்தை அருட்திரு. T. J. கிருபாகரன். ஆகியோர் சிறப்புரையாற்றினர்.

அருள்திரு M. J. செல்வநாயகம் தமது சிறப்புரையில் ''முறைசாராக் கல்வியின் முக்கியத்துவமும், அதன் இன்றைய நிலையும்'' பற்றிக் குறிப்பிட்டார். அருள்திரு. T. J. கிருபாகரன் தமதுரையில் ''மாணவன் தனது முழு மனித வளர்ச்சிக்கு வேண்டிய அறிவையும், அனுபவ திறனையும் ஆசிரியரின் கற்பித்தலில் இருந்தும், அந்த ஆசிரியரில் கண்டுகொள்ளும் பண்புகளில் இருந்தும், பெற்றுக்கொள்கிருன்'' என்று சுட்டிக்காட்டினர். பின்னர் செயலாளர் வருடாந்த அறிக்கையையும், சமர்ப்பித்தார்.

இதன் பின்னர் புதிய நிர்வாகிகள் தெரிவு இடம்பெற்றது. புதிய நிர்வாகிகள் பின்வருமாறு.

தலைவர்:- திரு. எ. யோசுவா
உபதலைவர்:- திரு. சி. வின்சென்ற்
செயலாளர்:- தோ. செபமாலை
உப செயலாளர்:- திருமதி மே. தி. சேவியர்
பொருளாளர்:- திருமதி இராஜநாயகம்.

இவர்களுடன் செயற்குழு உறுப்பினர்களாக அருட் செல்விகள் கென்றிக்கா, நசரேத் திருவாளர்கள் ஜெயசீலன், யேசுநாயகம், செல்விகள் ம, யேட்ருட் ஜெயசீலி, ஞா. யஸ்மின் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். அத்துடன் இவ்வாண்டில் ஆசிரியருக்கான ஞான ஒடுக்கத்தை 6-11-88 இல் நடத்துவதென்றும், அடுத்த ஆண்டு வியாகுல பிரசங்கப்போட்டி, வேதாகம நாடகம் என்பன நடத்துவதென்றும், 10-13-ம் ஆண்டு இருபாலாருக்குமான மாணவர் ஒன்றியத்தை ஆரம்பிப்பது என்றும் ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது. இறுதியாக செயலாளர் திரு. தோ. செபமாலை அவர்களின் நன்றியுரையுடன் இனிதே முடிவுற்றது.

செல்வி மேரி மரியாம்பிள்ளை
மறை ஆசிரியர்

வீட்டுக்கொரு பாதுகாவலன் - உங்கள் பங்கில் நடைமுறைப் படுத்துங்கள்

# எதிர்வரும் தேர்தல்பற்றி நாட்டுமக்களுக்கு ஓர் கிறிஸ்தவ அறிக்கை

(சென்றவாரத் தொடர்ச்சி)

இன்னும் நீதியான சமூக அமைப்பைக் கொண்டுவர பின்வருவன அவசியமெனக் கருதுகிறோம்.

1987 டிசம்பரில் வேலையில்லாதோர் தொகை 1,080,000 மட்டத்தை அடைந்துவிட்டது. வேலையில்லாத் திண்டாட்டம் எண்ணற்ற சமூகக் கேடுகளுக்கு வழியாகும் என்பது சொல்லாமலே விளங்கும் இளைஞர் வேலைவாய்ப்பின்மையே தெற்குப் பயங்கரவாதத்துக்கு ஒரு காரணமாகும். கூடிய விரைவில் அரசாங்க, தனியார், சுய வேலைவாய்ப்பு துறைகளில் வேலைவாய்ப்புகளை அளிப்பதற்கு சரியான பொருளாதார கொள்கைகள் உருவாக்கப்படவேண்டுமென்பது தெளிவு.

நாட்டு சனத்தொகையின் பெரும் பகுதியினர் வறுமையில் ஆழ்ந்திருக்கும்வரை உணவு முத்திரை மூலம் ஏழைகளுக்கு விநியோகிக்கப்படும் உணவுப் பொருள்களும் ஏனைய படியுதவிகளும் தொடர்ந்து வழங்கப்படவேண்டும். கொடுக்கப்படும் அளவு, வாழ்க்கைச் செலவுச் சுட்டெண்ணுக்கு ஏற்றவண்ணம் இருக்கவேண்டும். இத்தகைய படியுதவிகளை நிறுத்துமாறு சர்வதேச முகவர்கள் வற்புறுத்தினாலும் அதற்குப் பணிய மறுக்கவேண்டும். ஆயினும் மோசடிகளைத் தவிர்ப்பதற்கு உதவி பெறுவோர் கவனமாகத் தெரிவு செய்யப்பட வேண்டும்.

தேசிய சுகாதார சேவைகள் திருத்தியமைக்கப்பட வேண்டும். நோய்களுக்குச் சிகிச்சை அளிப்பதிலும் அவற்றைத் தடுப்பதற்கு முக்கியத்துவம் அளிக்கப்படவேண்டும். அரசாங்க வைத்தியசாலைகளில் அளிக்கப்படும் சேவை அண்மைக்காலங்களில் தரம்குறைந்துவிட்டது வைத்தியசாலையிலுள்ள நோயாளரிடம் கவனமும் பராமரிப்பும் அலட்சியம் செய்யப்படாதபடிக்கு, அரசாங்க வைத்தியர் தனிப்பட்டமுறையில் சிகிச்சை செய்வதும் பரிசீலனை செய்யப்பட வேண்டும். தனியார் மருத்துவமனைகள் பொது சுகாதார திட்டத்துக்கமைய செயற்படவேண்டும்.

அரசாங்க வீடமைப்புத் திட்டங்கள் தொடர்ந்து நடைபெறவேண்டும். நிலத்தின் விலையை ஏற்றும் ஊக வியாபாரத்தை அரசாங்கம் தடுக்கவேண்டும். புதிய வீடுகள் தேவை அடிப்படையில் கொடுக்கப்படவேண்டுமேயொழிய கட்சி ஆதரவின் அடிப்படையிலல்ல. கம் உதாவ குடியேற்றங்கள் ஏற்கனவே இருக்கும் கிராமங்களுடன் ஒருங்கிணைக்கப்படவேண்டும். குடியிருப்போரின் உரிமைகள் எப்போதும் பாதுகாக்கப்படவேண்டும்.

கல்வி தனி நபரதும் சமுதாயத்தினதும் வளர்ச்சிக்கு ஏதுவானதாயிருப்பதால், அது பாரபட்சமின்றி அனைவர்க்கும் கிடைக்கும்படி செய்யவேண்டும். அடுத்தடுத்து ஆட்சிக்குவந்த அரசாங்கங்கள் கல்வியை இலவசமாக்கியும், இலவச பாடநூல்களையும் மதிய உணவையும் விநியோகித்தும், நாட்டு மொழியை போதனை மொழியாக்கியும் இந்த நோக்கத்தை நிறைவேற்ற முயன்றுள்ளன. ஆயினும் சமூக பொருளாதார காரணிகளால் பாதிப்புற்ற பிள்ளைகளில் கணிசமான தொகையினர் கல்வி பெறுதிருக்கின்றனர், அல்லது வயது வருவதற்கு முன்னரே பாடசாலையை விட்டு விலகிவிடுகின்றனர். இத்தகைய பிள்ளைகள் விசேடமாகக் கவனிக்கப்பட வேண்டியவர்கள். அத்துடன் நகரம், கிராமம், பெருந்தோட்டம் ஆகிய இடங்களிலுள்ள பாடசாலைகளுக்கிடையேயுள்ள பாரதூரமான ஏற்றத்தாழ்வு நீக்கப்படவேண்டும். ஆசிரியர் பற்றுக்குறை, தரமற்ற கற்பித்தல், வசதிக் குறைபாடுகள் போன்ற பிரச்சினைகள் ஏனையோரைவிட வசதி குறைந்த பிள்ளைகளையே அதிகமாகப் பாதிக்கின்றன. மந்தகதியில் கற்போரையும், கல்வியில் பின்தங்கியோரையும் ஊக்கமிழக்கச் செய்கின்றன.

பாடசாலைகளில் ஒழுங்கு சீர்குலைந்துள்ளது. எமது சமயங்களில் காணப்படும் மதிப்பீடுகள் ஒழுங்கினைப் புதுப்பித்துப் புத்துயிரளிக்கலாம். பாடசாலைக்கு மட்டுமன்றி நாட்டிற்கும் ஒழுங்கு தேவை.

நாடு முழுவதும் ஆங்கிலம் ஒரு சர்வதேச மொழியாகக் கற்பிக்கப்படவேண்டும். அதே போன்று தேசிய மொழிகளான, சிங்களமும் தமிழும் எல்லாப் பாடசாலைகளிலும கற்பிக்கப்படவேண்டும். இதனால் ஒவ்வொரு பிள்ளையும் தன் தாய் மொழியை மட்டுமல்லாது மற்ற மொழியையும் அறிந்திருக்கும்.

கல்வி தொழில் நோக்குடைய தாய் அமைந்தாலும், கலைப் பாடங்களும் அலட்சியம் செய்யப்படலாகாது, ஏனெனில் அவை கூடிய சமூக உணர்வையும், பரந்த நோக்கையும் உண்டாக்குகின்றன.

சமயமும், மனித மதிப்பீடுகளை மதித்தலும் பாடசாலைக் கல்வித்திட்டத்தினுள் அமைந்திருக்கவேண்டும், ஏனெனில் அறிவிலும் திறனிலும் பிள்ளை அடையும் வளர்ச்சி, அறநெறியுணர்வினாலும் சமூக உணர்வினாலும் மேம்படுத்தப்பட்டு, வாழ்க்கைக்கும், மனித உறவுகளுக்கும் ஓர் ஆழ்ந்த அர்த்தத்தைக் கொடுக்கும்.

பல்கலைக்கழகங்கள் நெருக்கடியான ஓர் கட்டத்தைத் தாண்டிக்கொண்டிருக்கின்றன. பல்வேறு வளாகங்களில் தற்போது அளிக்கப்படும் வசதிகள் போதுமானவையல்ல என்பது தெளிவு. உயர் கல்விக்காக மேலும் பல ஸ்தாபனங்கள் அமைக்கப்பட வேண்டும். பாராளுமன்றக்குழு அண்மையில் முக்கிய குறைபாடுகளை சுட்டிக் காட்டியுள்ளது. மாணவர் குழுக்கள் சுதந்திரமாகவும் ஆரோக்கியமாகவும் இணைந்து செயற்படக் கூடியவிதமாக சனநாயகமுறைப்படி இது அமைக்கப்படவேண்டும். வளாகங்களில் பலவந்தம் செய்வது, அவர்களை சனநாயகப்பண்பற்ற முறைகளையும், தலைமறைவான எதிர்ப்புகளையும் கையாளத் தூண்டுகின்றது. விடுதிவசதிகள் சீரமைக்கப்படவேண்டும். புலமைப் பரிசில்கள் வாழ்க்கைச் செலவையொட்டியனவாய் இருக்கவேண்டும், பல்கலைக்கழக கல்வியின் பரிமாணம் சுதந்திரமான, முற்போக்கான பாடத்திட்டங்களைக்கொண்டு திருத்தியமைக்கப்படவேண்டும்

அரசாங்கத்தின் விசேட கவனிப்பு தேவைப்படும் சில குழுவினர் உள்ளனர். இவர்களுள் குழந்தைகளும் ஐந்து வயதுக்குட்பட்ட பிள்ளைகளும் குறிப்பிடப்பட வேண்டும் இத்தகைய பிள்ளைகளுள் அரைவாசிப்பேர் ஊட்டக்குறைபாடுடையவர்கள் என அண்மையில் வந்த புள்ளிவிபரங்கள் காட்டுகின்றன இதனால் வருங்கால ஆண்களும் பெண்களுமாக வளரவேண்டிய இப்பிள்ளைகளின் அறிவு வளர்ச்சியும் உடல் வளர்ச்சியும் பாதிக்கப்படுவதால் இது பாரதூரமான பிரச்சினையாகும்.

குழந்தை விபசாரம் ஒரு சமூகக் கேடாக இருக்கின்றது. அது ஒழிக்கப்படவேண்டும். அது போன்றே ஆபாச இலக்கியங்களை விநியோகிப்பதும் தடைசெய்யப்பட வேண்டும். குறைபாடுள்ள, ஊனமுற்ற சிறுவர் விசேட விதமாகக் கவனிக்கப்பட வேண்டும்.

மேற்கு ஆசியாவிற்கு வேலைவாய்ப்பிற்காகச் சென்றவர்கள் தமக்கும் தமது குடும்பங்களுக்கும் உதவுவது மட்டுமல்லாமல் நாட்டின் வருமானத்துக்கும் துணைபுரிகின்றனர். இவர்கள் சுரண்டப்படாமலிருக்க எவ்வளவோ செய்யலாம்.

பெண்கள் இன்னும் தாம் பெண்கள் என்ற காரணத்தால் ஒதுக்கப்பட்டும் சுரண்டப்பட்டும் வருகின்றனர். பெரும்பாலும் தம்மையொத்த ஆண்களின் வேதனத்தைவிட அவர்களது வேதனம் குறைவாக உள்ளது. சுதந்திர வர்த்தக வலயத்திலும் மேற்கு ஆசியாவிலும். தொழில்புரிபவர்கள் கவனிக்கப்படவேண்டும்.

முகாம்களில் தங்கியிருக்கும் பெருந்தொகையான அகதிகளுக்கு புனர்வாழ்வு அளிக்கப்படவேண்டும். அவர்களது வீடுகள் மீண்டும் கட்டப்பட்டு அவர்களது பொருளாதார முயற்சிகள் புனரமைக்கப்படவேண்டும்.. பல இன மக்களும் வாழும் இடங்களுக்கு அகதிகளைத் திருப்பி அனுப்புவதில் தேசிய இனங்களுக்கிடையே ஒப்புரவை ஏற்படுத்தும் பணி எம்மை எதிர்நோக்குகிறது.

இந்திய வம்சாவழியினரான தோட்டத் தொழிலாளருக்கு முழு பிரசாவுரிமை அளிக்கப்படவேண்டும். இது பெரும்பாலும் சட்டத்தினால் உறுதிசெய்யப்பட்டுவிட்டது. ஆனால் பதிவுசெய்வதற்குக் காத்திருப்போர் பட்டியல் நீண்டுகொண்டே போகிறது இதை இலகுவாக்குவதற்கு நிர்வாக செயல்முறைகள் சீராக்கப்படவேண்டும்.

இத்தொழிலாளர்கள் அயற் கிராமத்தவரோடு ஒற்றுமையாக வேலைசெய்யவேண்டும். போதைப்பொருள்களையும் வேறு தீய பழக்கங்களையும் தடுப்பதற்கு அரசாங்கம் என்றும் விழிப்பாயிருக்கவேண்டும். எமது நாட்டுமக்கள் போதைப்பொருள்களால் நாசமாவதை நாம் அனுமதிக்க முடியாது. கள்ளக்கடத்தல் பற்றிய சட்டங்கள் கடுமையாக நடைமுறைப்படுத்தப்படவேண்டும். போதைப்பொருளுக்கு இரையானவர் புனர்வாழ்வுபெற வழிசெய்யவேண்டும்.

லொத்தர்கள் இன்று அதிகரித்து வருவதையிட்டு வருந்துகிறோம் பந்தயமும் சூதாட்டமும் பெருகிக்கொண்டிருக்கின்றன. லொத்தர்கள், சூதாட்டங்கள், பந்தயங்கள் பல சமூகத்தீங்குகளுக்குக் காலாக இருப்பதால் அரசாங்கம் இவற்றை நடத்தவோ ஊக்குவிக்கவோ கூடாது.

பெரும்பாலான வளர்முக நாடுகள் சமூக காப்புறுதித் திட்டங்கள் மூலம் வாழ்வின் இடர்கள் ஆபத்துக்களுக்கெதிராக மக்களுக்குப் பாதுகாப்பளிக்கின்றன. நாம் ஏற்கனவே இருக்கின்ற காப்புறுதித் திட்டங்களையும், தொழிலாளர் சேம வைப்பு, நம்பிக்கை நிதியம் போன்றவற்றையும் விரிவுபடுத்தி, எல்லாவற்றையும் உள்ளடக்கியனவாகச் செய்தல் வேண்டும்.

பேச்சுச் சுதந்திரம், வெளியீட்டுச் சுதந்திரம், தகவல் பரிவர்த்தனைச் சுதந்திரம், மதிப்பீடுகளை வளர்த்தல் ஆகியவற்றில்சமூகத்தொடர்பு சாதனங்கள் வகிக்கவேண்டிய பங்கு ஒன்று உண்டு. அரசாங்கம் இச்சாதனங்களைக் கட்டுப்படுத்தாது. அவை சுதந்திரமாகச் செயற்பட்டு தமது பணியை நிறைவேற்ற அனுமதிக்க வேண்டும். சிறப்புத் தொழில் அமைப்புக்கள், தொழிற்சங்கங்கள் போன்ற குழுக்களின் பரந்த உரிமைத்துவத்தில் பத்திரிகைகள் இருந்தால், அது அறிவும், தகவலும் பெற்றுக்கொள்வதற்கு விழிப்பும் உயிராற்றலுமுள்ள ஒரு வழியாகும். தொலைக்காட்சிக் கூட்டுத்தாபனங்கள் சுதந்திரமானகுழுமங்களாக புனரமைக்கப்பட்டு, அரசியல் தலையீடுகளின்றி, ஒரு தேசியக் கொள்கையின்கீழ் செயற்பட வழிசெய்யவேண்டும், அவசியமானபோது தணிக்கை இருக்கலாம், ஆனால் கண்டபடி தணிக்கை செய்தலாகாது. அரசு இறக்குமதியாகும் அச்சுத்தாள்கள் மீது மனச்சாட்சியற்ற விதத்தில் வரி விதிப்பதும், பத்திரிகை அச்சகங்களை மூடி விடுவதும் பத்திரிகைச் சுதந்திரத்துக்கு ஓர் அச்சுறுத்தலாகும்

9. அரசியலமைப்பு

அண்மைக்கால அரசியல் வரலாற்றில், ஆட்சியை ஒருமுகப்படுத்துதல், முக்கியமாக நிறைவேற்று அதிகாரம் உள்ள ஜனாதிபதியிடம் மிகுந்த அதிகாரத்தைக் கொடுத்தல், ஒரு அம்சமாக இருந்துவந்துள்ளது. அனைத்தாண்மைப் பண்புகளுள்ள ஒரு அரசு வளர்வதற்கு இது வழிகோலியுள்ளது

அரச அதிகாரத்தை மாகாணசபைகளுக்கும், ஏனைய உள்ளூராட்சி மன்றங்களுக்கும் பகிர்ந்தளிப்பது இந்த ஒருமுகப்படுத்தும் போக்கை சமன்படுத்துவதுபோல் தோன்றியுள்ளது. முப்பதுகளின் பின் வந்த எல்லா அரசாங்கங்களும் பன்முகவாக்கத்தை உத்தேசித்துள்ளன. 1981-ம், 1986 ம் ஆண்டுகளில் நடந்த வட்டமேசை மகாநாடுகளிலும் இனப்பிரச்சனையைத் தீர்ப்பதற்கு பன்முகவாக்கமே சிறந்த வழியெனக் கருதப்பட்டது. மகாணசபைச் சட்டமும், 13வது திருத்தச்சட்டமும் பன்முகவாக்கத்தை அமுலாக்கக் கொண்டுவரும் கருவிகளாக ஏற்படுத்தப்பட்டுவிட்டன

இந்த சபைகளின் பொருத்தத்தைப் பற்றி நாட்டில் காரசாரமான விவாதம் நடந்துகொண்டிருப்பதை அறிவோம். 1988 ஏப்பிரல் 3ல் வெளியிட்ட அறிக்கையால் கத்தோலிக்க ஆயர்கள் இந்த முறை பொதுவாக நன்மையானதென்று ஏற்றுள்ளனர். இச்சபைகள் அரசாங்கத்தை மக்களுக்கு அண்மையில் கொண்டுவருவது மட்டுமல்லாமல் ஒவ்வொரு இடத்துக்குமுள்ள பிரச்சினைகளுக்கு கனமும் முக்கியத்துவமும் அளிக்க வழிசெய்கின்றன. பன்முகவாக்க வழியிலல்லாது வேறு எந்த விதத்திலும் இனப்பிரச்சினை தீர்க்கப்படுவது எவ்வாறு என விளங்கவில்லை

தற்போது இருக்கும் நிலையில் இச்சபைகளில் பல குறைபாடுகள் உண்டு என்பதை அறிவோம்.

மத்திய அரசின் அதிகாரம், சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டுதல், குடியேற்றம் என்னும் கஷ்டமான பிரச்சினை ஆகியவைபற்றி மேலும் தீர்மானங்கள் எடுக்கவேண்டியது அவசியமாகும் இந்த முறையை நம்பிக்கையோடு செயற்படுத்தினால் இதுபோன்ற எத்தனையோ பிரச்சினைகளைத் தீர்த்துவைக்கலாம்.

இங்கு கவனிக்கப்படவேண்டிய மற்றொரு விடயம் மனித உரிமைகளைப் பாதுகாப்பதாகும். சனநாயகத்தைப் பாதுகாப்பதற்கு அத்தியாவசியமான ஒன்றாக மனித உரிமைகள் பேணிப் பாதுகாக்கப்படவேண்டும். அரசாங்கமென்பது தன்மக்களுக்கு மனித உரிமைகளை அமுல்செய்வது தானே.

(தொடர்ச்சி 7-ம் பக்கம்)

# இப்படியும் ஓர் அழைப்பு

## சிறுகதை

காலையிளங் கதிரவன் தன் கதிர்களை விரித்து வீறுநடை போட்டு வந்துகொண்டிருந்தான். இன்னும் படுக்கையில் இருந்து எழுப்ப மனமில்லாத வனைப் படுத்திருந்தான் றெஜட்,

திடீரென ஏதோ நினைத்த வனக எழுபபி காலைக்கடன்களை முடித்துவிட்டு, தன் வீட்டின் பின் புறத்தில் இருக்கும் கடற்கரை மணற் பரப்பில் போய் உட்கார்ந்தான் கடற்கரையில் எழுந்த அலைகளைவிட இவனுள்ளத்தை ஓர் பெரிய அலையொன்று முட்டி மோதிக் கொண்டிருந்தது.

தன் இரு கைகளாலும் கால்களைச் சேர்த்தணைத்து தன் முகத்தை அதில் சாய்த்தபடி தலைனச் சூழ்ந்துள்ள அந்தப் பிரச்சனையைப்பற்றிச் சிந்திக்கலானான் றெஜட்.

வாழ்க்கையின் நடுத்தர நிலையை உடையவர் செல்வா. வருகின்ற வருமானம் குடும்பச் செலவுக்கு போதுமானதாயிருந்தது. நலிவில்லாமல் நடந்தது குடும்பம். குடும்பத்தில் முதலும் கடைசியுமான பையன் றெஜட் அவனுக்குப் பத்து வயது நடக்கும் போது இறையடி சேர்ந்தாள் அன்னை. உற்ற தாய் தந்தை செல்வாதான். தாய்க்குப் பின் றெஜட்டை கண்ணைப்போல் காப்பாற்றினர்.

றெஜட் சிறு வயது முதலே பக்தியில் சிறந்தவன். பூசை காணுத நாளே இல்லை. தாயில்லாக் குறை தெரியாமல் வளர்த்த மகனை B. A. வரை படிக்க வைத்தார். படிப்பிலும் நன்ருகத் திகழ்ந்தான். அவனது நாட்டம் சிறு வயது முதலே தேவ ஊழியத்தில் செல்வதைத் தந்தை உணராமலில்லை. இருந்தும் மகன் பேரிலுள்ள பாசத்தால் மணமுடித்து வைக்க எண்ணினர். தான் குருவாகப் போகிறேன் என்பதைத் தந்தைக்கு எடுத்துரைத்தான் தனயன். தக்க காரணங்களைச் சொன்னன் ஏற்கவில்லைத் தந்தை மகனுக்கு திருமணம்தான் சிறந்ததென்றுபிடிவாதமாய் நின்ருர். இறுதியில் பிடிவாதத்தைத் தளர்த்தாத தந்தையிடம் வேண்டா வெறுப்பாகக் கல்யாணத்திற்கு ஒத்துக் கொண்டான் றெஜட்

பேச்சு வார்த்தை தொடங்கியது திருமண நாளும் நெருங்கியது. தடல்புடலாக நடந்து கொண்டிருந்தன திருமண சம்பிரதாயங்கள். ஆனால், பேயறைந்தவன் போலக் காணப்பட்டான் றெஜட். தந்தை இதைக் கவனிக்காதவரும் அல்ல. மகனென்ற பாசம் அவரைத் தூண்டியது, திருமண அழைப்பிதழும் அடித்தாயிற்று.

அழகிலும், அறிவிலும் சிறந்தவளான மணமகள் நிமலாவின் மனநிலையைச் சொல்லவும் வேண்டுமா? கற்பனையுலகில் சஞ்சரித்தாள். அடிக்கடி தனது புத்தாடைகளைப் எடுத்துப் பார்ப்பதிலும், தன்னை நிலைகண்ணுடியில் பார்த்து அழகுபடுத்திக் கொள்வதிலும் அக்கறையாய் இருந்தாள். ஓடியாடி தின்பண்டங்களைச் சுவைபார்த்துக் கொண்டிருந்த நிமலா, திடீரென நெஞ்சு வலிக்கிறது என்று கீழே சாய்ந்தவள் தான் பின் எழுந்திருக்கவேயில்லை.

அங்கலாய்த்தான் றெஜட். இனி நடப்பதென்ன? எக்காரியத்திற்கும் தேவ சித்தமென்பது ஒன்று உண்டே. தந்தையால் மகனை நிமிர்ந்துபார்க்கவே முடியவில்லை. பைத்தியம் பிடித்தவன் போலிருந்தான். நண்பர்கள் பேச்சாலும் பங்குக் குருவின் தேறுதலாலும் சிறிது சிறிதாக மனந்தேறினன்.

மணம்! அந்த மணத்தால் தான் இன்று என் வாழ்வு மணமிழந்து கிடக்கிறது- அன்றே கடவுள் சேவைக்குச் சென்றிருந்தால் என்வாழ்வு சீரோடு இருந்திருக்கும். தேவ சித்தத்தை மீற யாரால் முடியும்? நான் குருவானவராக வேண்டுமென்பது தேவ சித்தமாயிருக்கும்போது அதை என் தந்தைக்காக மீறினேன். இல்லை... தந்தை மீறினர். ஆனல் என் வாழ்வு மகிழ்ச்சி தந்ததா?

அவனது நண்பன் ராஜ் நேற்றுக் கூறியவை நினைவிற்கு வந்தன. "றெஜட், உனக்கு வயதில்லையா வாழ்வதற்கு, வாலிபமில்லையா மணம் செய்து கொள்ள?"

❀❀❀❀❀❀❀❀❀❀❀❀❀

செல்வி இல்டா சிங்கராயர்
செல்லாச்சி அம்மையார் வீதி,
சுன்னுகம்

❀❀❀❀❀❀❀❀❀❀❀❀❀

"இன்று என் மனநிலையை மாற்ற நிமலாவே உயிர்த்து வந்தாலும் முடியாது ராஜ் வயதும் வாலிபமும் இருக்கிறது. இனிமேல் என் மனம் இறைவனுடன் தான்" தீர்மானமாகச் சொன்னன் ராஜிடம்.

வெயில் அகோரமும், மனவேதனையையும் தாங்க முடியாது பெருமுச்சொன்றைவிட்டபடி எழுந்து வீடு நோக்கி நடந்தான் கட்டிலில் சாய்ந்தவன் கண்விழிக்கும் போது நேரம் மா நான்குமணி.

'றெஜட்' என்ற குரல் கேட்டு தலை நிமிர்ந்தான், தந்தையும், நண்பனும் நின்றிருந்தனர். றெஜட் கண்களிலே வடிந்திருந்த கண்ணீரைத் துடைத்தவனய் எழுந்து தந்தையருகில் போனன்.

'றெஜட் உன் முடிவு தான் என்ன?' தீர்மானமாகக் கேட்டார் தந்தை, குரலில் கடுகடுப்பு ஒலித்தது.

"அதைத்தான் ராஜிடம் சொல்லிவிட்டேனே அப்பா. இனி யாராலும் இதை மாற்ற முடியாது."

"மாற்ற முடியாது! அப்படி என்ருல் இனி உன் முகத்தில் விழிக்கவும் பிரியப்படவில்லை. இத்தனை நாள் நான் ஓர் பாசம் மிக்க மகனின் தந்தை. இனி தான் தனி மனிதன்," அவர் குரல் கரகரப்பாய் இருந்தது.

"அப்படியென்ருல் நான் உங்கள் மகனில்லை என்கிறீர்கள்"

தந்தை மௌனமாகநின்றார் அவன் தொடர்ந்தன் அப்பா உங்கள் விருப்பப்படி ஒன்றுக்கு சம்மதித்தேன். அதன் முடிவு என்ன? இனியாவது என் விருப்பப்படி விட்டால் என்ன? தீய வழிக்கா செல்கிறன் உங்கள் மகன் தெய்வ நெறிக்குச் செல்கிறன். இனியும் திருப்பித் திருப்பிச் சொல்லி என்னை ஏன் நிர்ப்பந்தம் செய்கிறீர்கள்'

அவனது ஆத்திரம் அழுகையாக மாறியது. போய்க் கதிரையில் உட்கார்ந்து கொண்டு தேம்பித் தேம்பி அழுதான.

தந்தை மெதுவாய் தனயன் அருகில் போய் அவன் தலையைத் தடவிக் கொண்டே "அழாதே 'றெஜட்' உன் எண்ணப்படி உன் வாழ்க்கையைத் தீர்மானிக்கலாம்" என்றார்.

நான் உன்னைச் சோதித்தேனேயன்றி வேறல்ல நீ படித்துப் பட்டம் பெற்றதும் மணம் முடித்து வைக்க நினைத்தேன். அது என் பாசத்திலை செய்த செயல். ஆனல் அது சிதறிவிட்டது தேவசித்தத்தை எண்ணி எண்ணி மனதை மாற்றிக் கொண்டேன் பின்னும் உன் மனம் எந்த நிலையில் உள்ளது என்பதை அறிய எண்ணினேன். நல்ல மனத்திடனுள்ளவனை குருவாக வரத் தகுதி உள்ளவன்"

"உன் விருப்பத்துக்குச் சம்மதிக்கின்றேன்" என்றார்.

வியப்புக்கலந்த மகிழ்வோடு நன்றி பொங்க தந்தையை நோக்கினன் றெஜட்.

---

# தேனருவி

ஆண்டின் 33 ஆம் ஞாயிறு (13-11-88)

## கணக்கெடுப்பு

'கணக்கெடுப்பு' ஒவ்வொரு வியாபாரிக்கும் அவசியமானதொரு செயலாகும். அவனது லாப, நட்ட நிலைப்பாட்டைத் தெரிந்து கொள்ளும் கட்டம் அது. எப்பொருளில் அல்லது எத்துறையில் தனது முதலீட்டைத் தொடரவேண்டும் என்றெல்லாம் முடிவு செய்யும் காலம் அது.

வழிபாட்டு ஆண்டின் இறுதி வாரத்தில் இருக்கும் எமக்கும் திருச்சபைத் தாய் தரும் இறை வார்த்தையும் இத்தகைய உண்மையையே ஞாபகமூட்டுகிறது.

கணக்கெடுக்கும் நாள் ஒவ்வொருவர் வாழ்விலும் மரணத்தைப்போன்று தவிர்க்க முடியாத தொன்ருகும்.

இறுதிநாளில் இறைவன் நடுவராக நிற்க நல்லோர், தீயோர் என மக்கள் வகுக்கப்படும் போது வாழ்வோ அன்றேல் அழிவோ அவர்கள் தீர்வாகும். இறுதித்தீர்வு பற்றி வேதாகமத்தில் பல வடிவங்களில் வருணிக்கப்படுகிறது

"யார், யார் பெயர் நூலில் எழுதபபட்டுள்ளதோ, அவர்கள் மீட்கப்படுவார்கள்" (தானி. 12 : 1) கோதுமையை களைகளிலிருந்து பிரிப்பது போலும், செம்மறிகளை, வெள்ளாடுகளிலிருந்து பிரிப்பது போலும் பொதுத்தீர்வின் போது நல்லவர்கள் தீயவர்களிடமிருந்து பிரித்து இறையரசின் பங்காளராக்குவார் இறைவன்.

தாலாந்துகளைப் பங்கிட்ட தலைவன் கணக்கெடுப்பு நடாத்தினர். நம்பிக்கைக்குரியவராய் செயலாற்றியவரை அதிகாரிகளாக்கி மகிழ்கிருர். பிறரன்புப் பணியில் இறைவனைக்கண்ட சேவையாளரை தமது வலப்புறம் அழைத்து முடிவில்லா வாழ்வு வழங்குவார்.

ஒவ்வொவருடைய
உயிரும், உறவுகளும்;
ஆற்றல்களும், வளங்களும்;
காலமும், சந்தர்ப்பங்களும்;
இறைவனிடமிருந்தே வரும் ஆசீர்களாகும். எனவே அவை கணக்குக் கொடுக்கப்பட வேண்டியவை. அதிகம் கொடுக்கப்பட்டவரிடம், அதிகம் எதிர்பார்க்கப்படுகிறது. கணக்கெடுப்பின் காலமும், கணமும் எவரும் அறியார்.

இதனல் எம் நாளாந்த நடவடிக்கைகள் யாவும் கணக்குக் — கொடுக்கும் — மனநிலையோடு செயல்படுத்தப்பட வேண்டியவை.

அடுத்தவர் காணவில்லை, அவர்கள் கண்களுக்கு எட்டவில்லையெனத் தப்பித்துக் கொள்ள முடியாது. இன்னும் சிலகாலம்தான் வாழ்வு என நினைத்து தற்போதைய மகிழ்ச்சி போதும் என்றும் எங்களையே ஏமாற்றுதல் பயனற்றது. ஆனல் வாழ்வு நீடித்த வாழ்வாகத் தொடர வேண்டும். ஆற்றல்களும், அருங்கொடைகளும் பயன்பட்டுப் பெருகவேண்டும். 'தீர்வு' என்ற ஒளியுடன் நாளும் நிதானமாய் வழி நடக்க வேண்டும். இறைமகனின் முதல் வருகை, மீட்பரின் வருகை, அவரது இரக்கம் வற்ருத நீரோடையாய் பாய்ந்து பரவியது. ஆனல் அவரது இரண்டாம் வருகையோ நீதியின் பிரசன்னம். தீர்வின் காலம் கணக்கெடுப்பில் நீதியுள்ளோராய், பாராட்டுப்பெறும் தகுதியுடையோராய் விளங்குவது இறைவன் அருளுடன் கூடிய எம் ஒத்துழைப்பிலேயே தங்கியுள்ளது.

சுவாமி ஜீவா போல் அ.ம.தி.

---

தானி. 12 : 1—3 யார் பெயர் எழுதப்பட்டுள்ளதோ அவர்கள் மீட்கப்படுவார்கள்.
எபிரே. 10;11—14 கடவுளின் வலப்புறத்தில் அமர்ந்துள்ளார்.
மாற். 13:24—32 தாம் தேர்ந்து கொண்டவர்களைத் திரட்டுவார்.

---

## 25 ஆண்டு நிறைவு விழாக்கள்

வங்காலைப்பங்கில் 19 வது திருக்குடும்பக்கன்னிகை அருட்செல்வி நீக்கிலாஸ் தனது 25 வது நிறைவாண்டினை 20 6. 88 அன்று கொண்டாடினுர்கள் மறைமாவட்டக்குரு முதல்வர் அருள்திரு. சேவியர் குருஸ் அடிகளாரால் திருப்பலிப்பூசை ஒப்புக்கொடுக்கப்பட்டது.

அதன்பின் அருட்சகோதரிகள் மறியற்ரு - ஹில்டா ஆகியோரின் 25 வது நிறைவாண்டு விழா 8. 10. 88 ல் இப்பங்கில் நன்றிப்பலியாக ஒப்புக்கொடுக்கப்பட்டது. இவ்விரு கன்னியர்களும் திருச்சிலுவைத் துறவறசபையைச் சேர்ந்தவர்கள். திருச்சிலுவை மகிமைத்தினம் அன்று கொழும்பில் இவர்கள் விழாக் கொண்டாடினுர்கள். முதன் முதலாக வங்காலைப்பங்கில் இருந்து இச்சபைக்குத் தன்னை அர்ப்பணித்த அருட்சகோதரி மறியற்ருவைத் தொடர்ந்து 5 கன்னியர்கள் திருச்சிலுவைச் சபையில் சேவையாற்றி இக்கிராமத்திற்கு அளப்பரிய ஆசீர்வாதங்களை வழங்கி வருவதையிட்டு மகிழ்ச்சி கொண்ட அருட்திரு. பிராஞ்சீஸ் குலாஸ் அடிகள் "இறைவனின் திராட்சைத் தோட்டத்திற்கு இன்னும் எத்தனையோ பணியாளர்கள் தேவைப்படுகின்ருர்கள் இளைஞர் யுவதிகள் தம்அழைப்பை உணர்ந்துகிறிஸ்துவின் பணியாளனுகஇன்றே சவாலை ஏற்கவேண்டும்" என்றும் திருப்பலி வேளை மறையுரையில் குறிப்பிட்டார்கள் அருட்சகோதரிகள் பலர் கூடி விழாவில் கலந்துகொண்டார்கள்.

V. A. லெம்பேட்.

# "கற்றுக்கொள்ளுங்கள் வாழ்க்கையை"

வாழ்க்கையென்பது ஒரு நூல். நமது வாழ்க்கை நிகழ்ச்சிகள் தான் நூலின் அத்தியாயங்களாகப் படைக்கப்படுகின்றன. இந்தவித சிந்தனையுடன் தான் இளைஞர்கள் தம் வாழ்க்கை என்ற நூலைப்பற்றிச் சிந்திக்க வேண்டும். அதைப் படிக்க வேண்டும். அதைப் படிப்பிக்க வேண்டும். மனித வாழ்க்கையிலே இளைஞர்தம் வாழ்க்கை என்ற அரங்கத்தை அடைவதற்கு பல வழிகள் இருக்கின்றன. இந்த வழிகள் தான் சமூகத்தின் விழிகள். இதன் மூலமே சமூகம் என்ற அமைப்பானது நிறுவப்படுகின்றது.

இன்று பொதுவாக இளைஞர்கள் தமது வாழ்க்கையிலே பலவித தாக்கங்களால் ஏக்கம் அடைகின்றனர். தம் சீரிய ஆக்கங்கள் மட்டில் பலவித கேள்விக்குறிகளினால் அலைக்கழிக்கப்படுகின்றனர். இந்தக் கட்டத்தில் இளைஞனானவன் ஒரு சிந்தனாவாதியாக, ஓர் புதுமையைக் காட்டும் எழுத்தாளனாக, சீரிய வாழ்க்கையை எடுத்தியம்பும் பேச்சாளனாக தன்னைத் தயார்ப்படுத்த வேண்டும். இளைஞர்களே சமூகத்தின் கண்கள். இதனால் தாமின்று இளைஞர்களின் எழுத்துத்துறை பங்களிப்பு பற்றி சிந்திக்க வேண்டும்.

இளைஞர் சமூகமே! உன்னைத்தான் இன்று மக்கள் விடிவெள்ளியாக நம்புகின்றனர். உன்னைத்தான் தம் வாழ்க்கைப் பாதையில் இணைக்கின்றனர். நீ என்ன செய்கிறாய்? வரட்டு எண்ணங்களுடன் சமூகத்தில் வலம் வருகின்றாய். போலித் தலைமைத்துவங்களால் தடுமாறுகின்றாய். உன்னிடத்தில் உறுதியான செயற்பாடுகள் இல்லை. நீ செய்ய வேண்டியதென்ன? உன் எழுதுகோலை எடுத்துப்பார். உன் சிந்தனையை வடித்துப்பார். உன் சீரிய சிந்தனைகள் சமூக செயற்பாடுகளின் கருவூலங்கள். உன் இலட்சியபேச்சுக்கள் மக்களை விடுதலை வாழ்விற்கு இட்டுச்செல்லும் சிறந்த பாதைகள்.

எனவே இளைஞனே! நீ எழுத்தாளனாக மாறவேண்டும். உன் எழுத்துக்கள் சமூக ஊழலைத் தகர்க்க வேண்டும். அடிமைத்தன வாழ்வை உடைத்தெறிய வேண்டும். "ஒரு எழுத்தாளனே ஒரு சமூக வழிகாட்டி" என்பதை இளைஞர்கள் உணரவேண்டும். எழுத்துத்துறையானது ஒரு மகத்தானசக்தி. அது உண்மை வாழ்வை, விடுதலை வாழ்வை படைக்கச் செய்யும். இளைஞனின் இரு சக்திகள் பேச்சும், எழுத்தும், பேச்சினாலும், எழுத்தினாலும் இளைஞன் சமூகத்தைத் தட்டியெழுப்பலாம். உறங்குகின்ற மனித விழுமியங்களுக்கு உயிர்கொடுத்தெழச் செய்யலாம். நீதி, அன்பு, என்ற மனித தாற்பரியங்களைத் தளைக்கச்செய்யலாம். இளைஞனே! நீ உறங்கிய நாட்களை மறந்துவிடு. உன் அலட்சிய போக்கைத் துறந்துவிடு. எழுதுகோலைப் பிடித்துவிடு. இதனால் புதிய சமூகத்தைப் படைத்துவிடு. ஆகவே இளைஞர்களே! வாழ்க்கையைக் கற்றுக்கொள்ளுங்கள்! அதைக் கற்றுக்கொடுங்கள்!!

நிலான் சந்தாம்பிள்ளை

அ. ம. தி. குருமடம்
கொழும்பத்துறை,
4-11-88

## அளவோடு இரசியுங்கள்




அழகானவற்றை
அளவோடு இரசியுங்கள்
ஆனந்தமானவற்றை
ஆளுமையோடு இணையுங்கள்
இனியனவற்றை
இதயத்தில் இருத்துங்கள்
ஈனமானவற்றை
ஈயாமல் விலத்துங்கள்
உயர்வானவற்றை
உள்ளத்தில் இருத்துங்கள்
நிலையானவற்றை
நினைவினிற் கொள்ளுங்கள்
நிறைவானவற்றை
நிகழ்வுறச் செய்யுங்கள்
நேரானவற்றை
நேர்மையாய் தழுவுங்கள்
வளமானவற்றை
வாயார வாழ்த்துங்கள்
வசீகரமானவற்றை
வளம்பெற வளருங்கள்

அன்பு நெஞ்சன் வி. பி.

## இளைஞனே எல்லாமே உனக்குக் கேள்விதானா?

வாழப் பிறந்தவனே நீ வாழ்கின்றாயா?
அல்லது வாடுகின்றாயா?
சாதிக்கப் பிறந்தவனே நீ சாதிக்கின்றாயா?
அல்லது சமாதியாகின்றாயா?
காக்கப் பிறந்தவனே நீ காக்கின்றாயா?
அல்லது காற்றாய் மறைகின்றாயா?
உழைக்கப் பிறந்தவனே நீ உழைக்கின்றாயா?
அல்லது உழல்கின்றாயா?
மகிழப்பிறந்தவனே நீ மகிழ்கின்றாயா?
அல்லது மயக்குகின்றாயா?
சிந்திக்கப் பிறந்தவனே நீ சிந்திக்கின்றாயா?
அல்லது சிதறடிக்கின்றாயா?
ரசிக்கப் பிறந்தவனே நீ ரசிக்கின்றாயா?
அல்லது ரவுடியாகின்றாயா?
போராடப் பிறந்தவனே நீ போராடுகின்றாயா?
அல்லது போட்டிபோடுகின்றாயா?
பழகப் பிறந்தவனே நீ பழகுகின்றாயா?
பாழாக்குகின்றாயா?

செ. தொபிதாஸ் C. M. S. F.
மாத்தளை.

## வாழ்க இளைஞர் உலகம்

இளைஞர் உலகமே நீ சிறியவனாய்இருந்து
வளர்ந்து வளர்ந்து வருகின்றாயே
நீ என்றும் வளர ஆசிக்கின்றேன்
நீர் கூறும் நல் வார்த்தைகளைக் கேட்காவிடின்
நிம்மதியே இல்லையே
உன் பகுதி இல்லையெனில்
கவலை மேல் கவலையே
சில வேளைகளில் நாட்டுப்பிரச்சனை காரணமாக
எனது ஆசை நிராசையாகி விடுகின்றதே
இனிமேலாவது என் குறையை
நிறைவாக்க வாரா வாரம் தரிசனம் தருவாயாக
வாழ்க இளைஞர் உலகம்
வளர்க அதன் புகழ்

செல்வி மேரிமாலதி ஞானரெத்தினம்,
புங்குடுதீவு — 10

## சிந்தனைத் துளிகள்

ஒவ்வொரு மனிதனின் வாழ்க்கையும் ஒரு 'டையறி' அதில் அவன் எழுதவேண்டுமென்று ஆசைப்படுவது ஒன்று. ஆனால் அவன் உண்மையில் எழுதி முடிப்பது வேறொன்று.

—ஜேம்ஸ்பாரி

நமது மரணத்துக்காகச் சுடுகாட்டுத் தோட்டிகூட மனம் வருந்தும்படி நமது வாழ்க்கையை நாம் வளம் படுத்த வேண்டும்.

—மார்க்டுவைன்

தொகுத்தவர்:
சி. சாந்தலட்சுமி, தையிட்டி




## திருச்சபையின் சட்டத்தொகுப்பில் திருமணம்

புதிய திருச்சபைச்சட்டத்தொகுப்பு (Cannon Law) சில வருடங்களுக்கு முன்னர் தமிழிலே மொழிபெயர்க்கப்பட்டது. அந்த சட்டத்தொகுப்பிலே திருமணம் பற்றிய பகுதியை உங்களுக்காக விரைவில் சுருக்கமாகவும் விளக்கமாகவும் தரவிரும்புகிறோம்.

இப்பகுதியை நீங்கள் வாசித்து பயன்பெறவும் அதன் அடிப்படையில் வாழவும் வேண்டுமென்ற கத்தோலிக்க திருச்சபையின் விருப்பத்தை உங்களில் நிறைவு செய்யும் நோக்கோடு இந்தப்பகுதியை நாங்கள் தொடங்குகிறோம்.

இன்றைய காலங்களில் குடும்பங்கள் பல புதிய பிரச்சினைகளை எதிர் நோக்குகின்றனவென்று கூறலாம் என நினைக்கிறோம். காலத்தின் போக்குகளும் எமது மண்ணின் நிகழ்வுகளும் வெளிநாட்டு மோகமும் கூட எங்களுடைய குடும்பங்களை சிதறடித்துவிட்டன அல்லது குடும்பவாழ்வின் நிலைகளை குழப்பிவிட்டன. சற்று விளக்குவதானால் —

வெளிநாட்டு மாப்பிள்ளையின் முகத்தைப் பார்க்காமலே முடிவுகள் எடுக்கப்படுகின்றன. 'மூட்டைகளுடன்' அனுப்பப்படுகிறாள் பெண்.

மாப்பிளை போகவேண்டும் 'திடீர்க்கலியாணம், — அவர் திடீரென்றே போய்விடுகிறார். மனித உறவுகள் என்னவாகின்றன.

மாப்பிள்ளை கனடா பொம்பிளை ஜேர்மனி கலியாணம் இலங்கையில் பேசப்படுகிறது. கண்டதும் காதல் — அவர்களைக் காலையில் காணவில்லை. ஒருமாத வாழ்க்கை — பின் தனியாக ஓடியே வந்துவிடுகிறார்கள்

சமகால நிகழ்வுகள் எனும்போது நினைத்துப் பார்க்க முடியாத நிரந்தரப்பிரிவுகள். கூடிவாழ விரும்பியவர்கள் குலைத்துவிடப்படும் நிலை. அமைதியான வாழ்க்கையில் அநியாய நிகழ்வுகள் — ஐயோ குடும்பமே கேள்விக்குறியாகிறது.

திருச்சபை சட்டத்தொகுப்பில் திருமணம் என்ற தலைப்பின்கீழ் தொடர்கட்டுரைகளை எழுதத்தொடங்குவதற்கு முன்னர் இன்னும் சில அனுபவங்களை பகிர்ந்து கொள்ள வேண்டும்.

"நீங்கள் குடும்பம் ஒரு கதம்பம் என்ற பகுதியை எழுதுகின்றபடியால்"— என்று தொடக்கி கடிதம் எழுதிய ஒருவர் தனது திருமணம் ஆகாத மகளுக்கு திருமணம் பேசித் தரும்படிகேட்டு எழுதியிருந்தார். திருமணங்கள் சொர்க்கத்தில் நிச்சயிக்கப்படுகின்றன என்று கூறுவார்கள் ஆண்டவனின் ஆசிஇல்லாமல் எதுவுமே நடக்காது என்ற ஆழ்ந்த நம்பிக்கைகளை உருவாக்கிக் கொள்ளுங்கள். இந்தப்பகுதியை நாம் எழுதத் தொடங்கியமையால் இதுபோன்ற வேலைகளிலும் ஈடுபடமுடியுமா என்பதை நாம்இன்னும் சிந்தித்து முடிவெடுக்கவில்லை.

"எங்களுடைய குடும்பநிலை இவ்வாறிருக்கிறது இதை நிவர்த்தி செய்வதற்கான வழிவகைகளை எழுதி அனுப்புங்கள்" என்று கேட்டு தமது குடும்பத்தின் சில பிரச்சினைகளை பகிர்ந்து கொண்ட சிலருக்கு எம்மால் கொடுக்கக்கூடிய சில அறிவுரைகளை தனிப்பட்டமுறையில் வழங்கியிருக்கிறோம்.

"உங்களுடைய குடும்பம் ஒரு கதம்பம் பகுதியை வாசித்தபின் சண்டை பிடித்த எங்கள் குடும்பம் பிரிந்துவிட்டது" என்று கூறிக்கொண்டு ஓர் இளம் தாய் எம்மிடம் வந்தபோது "அப்படியென்றால் இந்தப்பகுதியை இனிநிறுத்த வேண்டியதுதான்" எனமுகத்தில் அடித்தாற்போல் பதில் கூறிய அனுபவம் மிகவும் பசுமையாக உண்டு.

குடும்பங்களை இணைக்கவும் வழிகாட்டவுமே இந்தப்பகுதி இங்கு அமைகிறது. கடமைக்காக எழுதப்படுகிற பகுதி அல்ல இது. வாழ்வுக்காக வழிகாட்டத் தரப்படுகின்ற பகுதி இது.

உங்களுடைய பக்கத்தில் குடும்பத்திற்கு வழிகாட்டக்கூடிய பலகருத்துக்கள் இருக்கின்றன என்று சிலர் கூறுகின்ற வேளையில் எங்களுடைய பகுதி எங்கள் குடும்பத்தைப் பிரித்துவிட்டது என்ற இந்த சம்பவம் எமக்கு சற்று அதிர்ச்சியாகவிருந்தது.

எழுதுவதன்படியெல்லாம் நாம் வாழ முடியுமா? அவர்கள் அப்படித்தான் எழுதுவார்கள், என்னால் இப்படித்தான் வாழமுடியும் என்று சிலபழகிய பழக்கவழக்கங்களை மாற்றிக் கொள்ளமுடியாத சிலர் கூறிக்கொண்டு வாழ்வது கவலை தரும் ஒன்றுதான்.

அருள்திரு. ரூபன் மரியாம்பிள்ளை

# அருள்வாக்கு அறிவோம்

திருமறைப்பணி நிலையம்
த. பெ. இல. 2,
ஆயர் இல்லம், யாழ்ப்பாணம்.

## சிறிய இறைவாக்கினர்-4

### ஆமோஸ்—4

ஆமோசின் இறைவாக்குரைக்கும் பணி இரண்டாம் ஏரோபோவாமின் ஆட்சிக்காலத்தின் பிற்பகுதியில் "நில நடுக்கம் உண்டாவதற்கு இரண்டாண்டுகளுக்கு முன்" (ஆமோ. 1:1) இடம் பெற்றதாகக் குறிப்பிடப்படுகின்றது. ஏறக்குறைய கி. மு. 750 க்கு அண்மிய காலத்தில் பணிபுரிந்தார் என்று ஆய்வாளர்கள் கருதுகிறார்கள்.

இறைவாக்கினர் ஆமோஸ் ஆள்வோரையும், செல்வந்தர்களையும் கண்டித்து எச்சரிக்கின்றார். மனித மரபுகளை முறித்தல், அநீதி. உண்மையான இறை பக்தியின்மை ஆகிய குற்றச் சாட்டுகளை அவர்கள் மேல் சுமத்துகின்றார்.

அவரது நூலில் முதலில் நாடுகள மீது தீர்ப்புக்கூறப்படுகின்றது. இஸ்ராயேலரின் அண்டைநாடுகளுக்கு எதிராகத் தீர்ப்புக்கூறப்படுகின்றன அவர்கள் செய்துவரும் அக்கிரமங்களுக்காக இறைவன் அந்நாடுகளைத்தண்டிப்பார் என்று எச்சரிக்கின்றார்.

யூதா ஆண்டவரின் திருச்சட்டத்தைப் புறக்கணித்து கட்டளைகளைக் கடைப்பிடிக்காததற்காக தண்டிக்கப்படும். இஸ்ராயேல் பழிச்செயலுக்குமேல் பழிச்செயல் செய்ததற்காகத் தண்டிக்கப்படும் என எச்சரிக்கின்றார்.

இரண்டாவதாக இஸ்ராயேலை அச்சுறுத்தி எச்சரிக்கை செய்கின்றார். இறைவாக்கினர்கள் இறைவனால் அழைப்புப் பெற்றவர்கள். அவர்களின் பணியை எதிர்க்க முடியாது என்கின்றார். இஸ்ராயேலரின் பாவத்தை, ஆடம்பர வாழ்வை, மனம் திரும்பாமல் பிடிவாதமாக இருப்பதைக் கண்டிக்கின்றார். வரப்போகும் தண்டனையை அறிவிக்கின்றார்.

கி. சா. பங்கிராஸ்

அறிந்து கொள்ளுங்கள் 58

## மாமன்னன் சிற்றரசன் உடன்படிக்கை

சீனாய்மலை உடன்படிக்கைபற்றி சென்ற வாரங்களில் பார்த்தோம். உடன்படிக்கைபற்றிய சிறப்புகளை தொடரும் பகுதியில் காணுவோம். உடன்படிக்கை செய்வோர் உடன்படிக்கைப்பத்திரம எழுதுவது மரபு. பழங்காலம் முதல் இன்றுவரை அது வழக்கிலுள்ளது. இன்று எம் மக்கள் மத்தியிலுள்ள உயில் எழுதுதல், நிலவிற்பனைப் பத்திரம் எழுதுதல் போன்றே அன்றும் பத்தரம் எழுதும் வழக்கம் இருந்தது. அன்று நாடுகள் அனைத்தையும் ஆண்ட மாமன்னன், சிற்றரசன் ஒருவனுடன் செய்து கொள்ளும் உடன்படிக்கை முறைபோன்றதே சீனாய்மலை உடன்படிக்கை.

மாமனன்னன் சிற்றரசனுடன் செய்து கொள்ளும் உடன்படிக்கைபற்றி இங்கே பார்ப்போம். அவ்வுடன்படிக்கையில் மாமன்னனுடைய பெயர், பட்டங்கள், குணநலன்கள், மாட்சி அதிகாரங்கள் குறிக்கப்படும். தொடர்ந்து மாமன்னன் சிற்றரசனுக்கு செய்த உதவிகள் இன்னும் சிற்றரசன் மாமன்னனிடம் பெற்ற நன்மைகள் தனது மூதாதையருக்கு காட்டிய கருணை நன்மை யாவும் கூறப்படும் அத்தோடு மாமன்னன் விதிக்கும் நிபந்தனைகள் அழுத்திக்கூறப்படும் (1) தவறாமல் திறை செலுத்தல், (2) சிற்றரசர்களுக்கிடையில் சச்சரவு ஏற்பட்டால் மாமன்னன்முன் சமர்ப்பித்து தீர்வு காணுதல், (3) வேறு பேரரசுகளுடன் உடன்படிக்கை செய்யக்கூடாது. (4) மாமன்னனுக்கெதிராய் சதி செய்யக்கூடாது. (5) போர்க்காலத்தில் மாமன்னனுக்குத் துணையாகச் செல்லவேண்டும். இவற்றை மீறினால் உடன்படிக்கை முறிக்கப்படும்.

இவ்வாறு செய்துகொண்ட உடன்படிக்கைப் பத்திரம் சிற்றரசனுடைய நாட்டிலுள்ள கோவிலில் வைக்கப்பட்டு முக்கிய காலங்களில் நாட்டுமக்களுக்கு அது வாசிக்கப்படவேண்டும். இதனால் சிற்றரசனின் மக்களுக்கும் மாமன்னனுக்கும் இடையே உள்ள உறவு உறுதிபெறும். சாட்சியில்லாத உடன்படிக்கை அன்று மட்டுமல்ல இன்றும் செல்லாது. அன்று உடன்படிக்கைக்கு சாட்சியாகத் தேவர்களை அழைப்பர், அத்தேவர்களின் பெயர்கள் பத்திரத்தில் எழுதி வைக்கப்படும்.

இப்படியாகச் செய்துகொள்ளப்பட்ட உடன்படிக்கையைச் சிற்றரசன் மீறினால் மாமன்னன் கோபம்கொண்டு அவன் மீது போர் தொடுப்பான். இதனால் மக்கள் பல துன்பங்களை அனுபவிக்க நேரும். மாமன்னனுடன் சிற்றரசன் செய்து கொண்ட உடன்படிக்கையை உறுதிப்படுத்த உறுதிமொழி கொடுக்கவேண்டும். இது அன்று நடைபெற்ற உடன்படிக்கை முறை.

இ. ம. ஜெயசீலன்

## பழமொழி ஆகமமும் முதுமொழியும்.

வாசகர்களே!

பெண்களைப்பற்றிப் பெருமையாகப் பேசுகிறது சமுதாயம். பருவத்தே பயிர் செய்ய வேண்டும் என்று எண்ணி, எமது பெண்பிள்ளைகளின் எதிர்கால வாழ்விற்காக எவ்வளவு தியாகங்களை செய்கின்றார்கள் எமது பெற்றோர்.!

எப்பாடுபட்டாவது எனது பெண்ணை ஒருவன் கையில் பிடித்துக் கொடுத்துவிட்டால். நான் நிம்மதியாக கண்ணை மூடிவிடுவேன் என்று எமது தாய்மார் எவ்வளவு பாடுபடுகிறார்கள்.?

கஷ்டப்பட்டு காசை வாரிக் கொட்டி, கரையேற்றிய பெண்ணுக்கு ஒரு குடிகார - ஒழுக்கக்கேடான கணவன் வாய்த்து விட்டால் ... ...?

"ஐயோ கிளியை வளர்த்து-பூனையின் கையிலே கொடுத்து விட்டேனே ......" என்று புலம்புகிறாள் தாய். ஆனால அடுத்த வீட்டார், பொறாமையினால் எப்படிச் சொல்லுகிறார்கள் தெரியுமா.?

"ஆளனில்லாப்பெண்ணுக்கு ... அடுத்த வீட்டுக்காரன் மாப்பிள்ளை."

இவைகள் ஆசையினாலும் ... அங்கலாய்ப்பினாலும், ... ஆவலாதிகளாலும் எழுந்த முதுமொழிகள்.

இதற்கு ப. மொ. ஆகமம் 7 : 13 இல் என்ன கூறுகின்றது? கேளுங்களேன்.!

"அவள் அவ்விளைஞனைக் கட்டிப்பிடித்து முத்தம் இட்டு-நாணமற்றமுகத்தோடு கொஞ்சிச் சொல்லுகின்றதாவது ."

இப்படி தவறிழைக்கும் பெண்களை கடிந்துரைக்கிறார்! இதன் கேடுகளை எப்படி உரைப்பது?

பெண்கள் இந்நாட்டின் கண்கள். அவளின் கற்பு - கண்ணியம் பேணப் பாதுகாக்கப்பட வேண்டியது. போற்றப்பட வேண்டியது. இப்படிப்பட்ட எமது தாய்க்குலம். தவறிழைக்கும்போது அதற்கு அவள் மட்டும் பொறுப்பல்ல, ஆணும் தானே பொறுப்பு இல்லையா,

பெண்களின் தவறுகளைப் பெரிதுபடுத்தும் மக்களுக்கு 7 : 18 இல் ஆசிரியர் அருவருத்துக் கூறுகின்றார் எப்படி?

"வா - பொழுதுபுலருமட்டும் கொங்கைகளில் இன்பம் நுகர்ந்து ஆசைதீர அள்ளி அணைத்துக் களித்து இருப்போம் ,,, ,,," என்று அவளின் தவறுகளுக்கு காரணமான ஆணனத்தையும் சாடுகிறார்.

இதற்கு நம்நாட்டு முதுமொழியாளர், அனைத்துத் தவறுகளுக்கும் பெண்ணே பொறுப்பு என்ற தோரணையில் "ஆவதும் பெண்ணாலே ... அழிவதும்பெண்ணாலே, என்றும் "நண்டு கொழுத்தால்-வளையில் தங்காது" எனவும், கூறுவர்.

"அம்பினும் கொடிய
கண்ணாள்
... ஆயிரம் சிந்தையாளை ...
நம்பின பேர்களெல்லாம் ...
நாணினும் கடையராவார்
......" என்று

'விவேக சிந்தாமணியும்' கூறுகின்றது.

—எஸ். ஏ. நாதர்.

# காவலன் கண்மணிகள்

ஒளி: 2
சுடர்: 32

**எம் விழிகளின் ஒளி யேசு**
**எம் வாழ்வின் வழி யேசு**

### உங்களைபபற்றி உங்களிடம்

20 வினாக்கள் கேட்கிறேன். இவ்வினாக்களுக்கான விடைகளை "காவலன் கண்மணிகளில்" காணலாம். தாவீதடிகள் பரிசுத்திட்டத்தின் இறுதிப் போட்டி இதுவாகும். உங்கள் விடைகளை 3-12-88க்குள் அனுப்பவும். புள்ளி: 2×20=40

1. மடல் I அன்பு விழியால் அறிமுகம் செய்யப்பட்ட நூல் எது?
2. "படிப்பினை"யைத்தந்த கவிஞர் பெயர் என்ன?
3. "உத்தமர் உயிர்த்தார்" என்று பாடியவர் யார்?
4. 'ஒப்படை' என்ற கவிதையைத்தந்தவர் பெயர் என்ன?
5. அன்னையின் வாழ்விலிருந்து" என்ற கவிதையைப் படைத்த கண்மணி யார்?
6. கண்மணிகளில் முதலாம் எண்ணைப்பெற்ற கண்மணி யார்?
7. "வேண்டுகின்றோம்" என்று பாடியவர் யார்?
8. "அப்பா, அம்மா" வைச் சிந்திக்கச் சிரிக்கச்செய்தவர் யார்?
9. சுவாமி மு. வல்தாரிசு அவர்கள் தந்த கவிதையின் பெயர் என்ன?
10. "ஜெபியுங்கள் ஜெயம் பெறுவீர்," என்ற கருவின் பிறப்பிடம் எது?
11. "மண்ணில் பாவ இருள் விலகி ஓடும்," என்று பாடிய கண்மணி யார்?
12. "எம் விழிகளின் ஒளி யேசு" என்ற கவிதையினைத் தந்தவர் பெயர் என்ன?
13. "எம் விழிகளின் ஒளி யேசு" என்ற கட்டுரையை எழுதிய கண்மணியின் பெயர் என்ன?
14. "விடிவின் விலாசங்களை"த் தேடிய கண்மணி யார்?
15. 'மகனே உன் தந்தையின் முதுமையில் ஆதரி' எனப் பகர்ந்த கண்மணியின் பெயர் என்ன?
16. 'புது யுகம் பிறக்குமா? என்று கேட்ட கண்மணியின் பெயர் என்ன?
17. "இறை வார்த்தையை இதயத்தில் ஏற்றி விடுக" என்று சொன்னவர் யார்?
18. "அலையும் யாத்ரர்கள்," பற்றிப் பாடியவர் யார்?
19. "விவிலியமும் திருக்குறளும்" என்று நூலை எழுதியவர் யார்?
20. "உயர்வடைவோமாக," என்று பாடியவர் யார்?

★ ★ ★

**தாவீதடிகள் பரிசுத்திட்டம் 3-12-88**
**அன்று நிறைவு பெறுகிறது,**

தட்டிப்புதிர், மிகச்சிறந்த தேர்வுக்கான விடைகள் அடுத்த சுடரில் வரும்.

## அண்டி வா

பாதைகள் மாறிய போதும்
தேவைகள் தோன்றிய போதும்
ஆசைகள் வளர்த்த போதும்
ஆண்டவனை அண்டிவா.
சோதனைகள் வந்தாலும்—பல
வேதனைகள் சேர்ந்தாலும்
பாதையை மாற்றிட
பரமனை அண்டிவா.
வாதைகள் வந்தாலும்
வழுக்கி வீழ்ந்தாலும்
ஆறுதல் பெற்றிட
ஆண்டவனை அண்டிவா.
உறவுகள் வெறுத்தாலும்
உண்மைகள் தூங்கினாலும்
தெளிவு பெற்றிட
தேவனை அண்டிவா.

D. E. ரட்ணராஜ்
இளவாலை.
அங், எண். 65.

# ஓவியப் போட்டி-3

## இயேசுவின் "உருமாற்றம்"

இக்காட்சியை அழுத்தமாக வெள்ளைத்தாளில் கறுப்பு நிறத்தை மட்டும் பயன்படுத்தி 12" × 10" ஓவியமாக வரைந்து 25-11-1988க்குமுன் "பாதுகாவலன்" அ. பெ. இல. 2 யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பி வையுங்கள். சிறந்த ஓவியத்திற்குப் பரிசு ரூபா 25/- பரிசு பெறுபவர் பெயரும், பரிசு பெறும் ஓவியமும், அடுத்த போட்டியும் 9-12-88 பாதுகாவலனில் வெளிவரும்.

ஓவியப் போட்டி 2-இன் பரிசுபெறும் ஓவியம்



"இயேசு நல்லாயன்"

## ஓவியப் போட்டி 2-இன் முடிவுகள்

முதலாம் இடம்: எஸ். யோகேஸ்வரன் C/O ஏ. யோகநாதன்
பிரதான வீதி, மன்னார்.

இரண்டாம் இடம்: அன்ரன் டினேஷ் யேசுதாசன்,
கென்றி அரசர் கல்லூரி, இளவாலை.

மூன்றும் இடம்: அ. கொலின்ஸ் டொனுல்ட்,
கடுத்தனுலை, இளவாலை.

பாராட்டுப் பெறுவோர்:

இம்மனுவேல்பிள்ளை அன்ரன் தனதாஸ், லூசியா கிறேஸ் அருள்பிரகாசம், எல். ஆர். மக்டெனுல்ட், பெ. றேகஹ, யோசவ் மனேகரன் யேசுரட்ணம், ரி. ஆன். றெபெக்கா, லூசி பர்ஞந்து, லோ. அசம்ரா றஜினி, லோ. நிலானி, காமலின் றேகினி, டொ. ஹில்ரன் நரேந்திரன், செ. மேரி அன்ரனிற்ரு, (ஜெயா), காமலின் கிறிஷாந்தி, கு. ராஜேஸ்வரி, இ. யூட் லூர்துருயன், இ. யூட் அன்ரனி, யூடி ஜக்குலின் அன்ரனி, சுதர்சினி இம்மனுவேல், றுபேஜினி மரியநாயகம், பெ. சியாமினி படுனு, செபஸ்ரியாம்பிள்ளை றவிசங்கர், ஜுட் றவிநாத் செபஸ்ரியாப்பிள்ளை, சூ. கௌரி சூசைராஜா, மரியா கவியரசி, சா. ப. போல் அமல்ருஜ், எஸ். யேசுதாசன், ஸ்ரெலா மேரி அம்புறேஸ், பற்றிமா றேனுகலா, த. எவாஞ்சலின் தயாளினி, இ. யூட் பிறேமசீலன், த. யோ. தனரஞ்சன், எஸ். எல். டெலா மாக்கிறட் ஸ்டென்லி, அன்ரனி தோமஸ், E. N. ரஞ்சித்குமார், கொன்சி அல்பிரட், ஏ. அனுரா சேவியர், தீ. சந்தியோகு, ஞா. ஞானதயாளன், ம. அமலதாஸ், சர்மிலா தேவி, றேசினி செலினு, ஜேம்ஸ் உத்திரா.

## புதிய ஒலிநாடாக்கள்

★ ஆன்மாக்களின் மாதத்தில் தியானிப்பதற்கும், மரணவீடுகளில் பயன்படுத்துவதற்குப ஏற்றவகையில் சிறப்பான முறையில் தயாரிக்கப்பட்டு வெளிவந்திருக்கிறது 'வீடுநோக்கி' என்னும்இசைச்சித்திரம்.

★ புதிய கிறிஸ்மஸ் ஒலிநாடாக்களும் எம்மிடமுள்ளன, விரும்பியோர் எம்முடன் தொடர்பு கொள்ளவும்.

கிடைக்குமிடம்:-
யாழ். மறைக்கல்வி நிலையம்.

## 'எம் கருத்து' குறள் தெளிவுரை

மயக்கம் நீங்கிக் குற்றம் அற்ற மெய்யுணர்வை உடையவர்க்கு, அம் மெய்யுணர்வு அறியாமையை நீக்கி இன்ப நிலையைக் கொடுக்கும்.

# எதிர்வரும் தேர்தல்...

(3 ஆம் பக்கத்தொடர்ச்சி)

மனித உரிமைகள்பற்றிய அனைத்துலக சாசனம் எமது சொந்த சட்ட ஆக்கத்தையும், நிர்வாகத்தையும் ஊக்குவிக்க வேண்டும். நாம் அங்கீகரித்துள்ள பொருளாதார, சமூக, கலாசார உரிமைகள், சமூக அரசியல் உரிமைகள் ஆகியவற்றை எமது சட்டங்கள் நடைமுறைக்குக் கொண்டுவர வேண்டும்.

சட்ட ஆட்சியும், சுதந்திரமான நீதித்துறையும் மனித உரிமைகளை உறுதிப்படுத்தும் அடிப்படைகளாகும். நீதியரசர்களை நியமிப்பதும், பதவியுயர்வு அளிப்பதும் அரசியல் தலையீட்டுக்கு அப்பாற்பட்டதாயிருக்கவேண்டும்

பொலிசாரும் இராணுவப் படையினரும் மேற்கொள்ளும் சித்திரவதைபற்றிய குற்றச்சாட்டுகள் மிகவும் கவலைக்குரியன. சட்டரீதியாக விவரிக்கப்பட்ட ஒரு நடைமுறையின் கீழன்றி ஒருவரும் கைது செய்யப்படமாட்டார்கள் என்ற உறுதி நாட்டிற்குத் தேவைப்படுகின்றது கைதுசெய்யப்பட்டோர், தடுக்கப்பட்டோர், விளக்க மறியலில் உள்ளோர் அனைவரும் விரைவில் விசாரணைக்குக் கொண்டுவரப்பட வேண்டும் அல்லது விடுதலை செய்யப்பட வேண்டும்.

1979 ம் ஆண்டு கொண்டுவரப்பட்ட பயங்கரவாதத் தடைச்சட்டம் பல துஷ்பிரயோகங்களுக்கு வழிகோலியுள்ளது. அது போன்றதே நெருக்கடிகளின்போது அவரசகாலச் சட்டங்களை நடைமுறைப்படுத்துவது. பயங்கரவாதத் தடைச்சட்டம் ஒன்றில் முற்ருக நீக்கப்பட்டு, மனிதத் தன்மையான வேருெரு சட்டம் இயற்றப்பட வேண்டும். அல்லது அதன் ஆட்சேபகரமான பகுதிகள் திருத்தியமைக்கப்படவேண்டும்.

புதிதாகக் கொண்டுவரப்படவிருக்கும் சட்டவிலக்குரிமைச் சட்டம் 1979 ஜுலையிலிருந்து 1987 டிசம்பர் வரை பயங்கரவாதத் தடைச்சட்டத்தின்கீழ் பொதுமக்கள் பாதுகாப்பிற்காக, சட்டவிரோதச் செயல்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கும் அதிகாரிகளும் பிறரும் கிரிமினல் அல்லது சிவில் குற்றச்சாட்டுகளின் பேரில் தண்டிக்கப்படுவதிலிருந்து காப்புரிமை அளிக்க முயல்கின்றது. இந்தச் சட்டமானது அரசியலமைப்புக்கும் அடிப்படை உரிமைகளுக்கும் விரோதமானது என கடுமையாக விமர்சிக்கப்பட்டுள்ளது. இது முற்ருக வாபஸ்பெறப்படவேண்டும்.

எமது அரசியலமைப்பு "ஓம்புட்ஸ்மன்" அல்லது நிர்வாகத்துக்கான பாராளுமன்ற ஆணையாளர் பதவிக்கு இடமளிக்கின்றது நாளாந்த நிர்வாகத்தில் ஏற்படும் சிறிய மனித உரிமை மீறல்களைத் தடுப்பதற்கு இது ஒரு மிகச் சிறந்த ஏற்பாடாகும். இதன் பரப்பெல்லை விஸ்தரிக்கப்பட்டு, இந்த அலுவலகத்தின் மூலம் தமக்கு நிவாரணம் கிடைக்குமென்பதை மக்கள் அறிய வேண்டும்

இனப்பிரச்சினை

பல்வேறு கிறிஸ்தவ சபைகளும்பலசந்தர்ப்பங்களில் இனப்பிரச்சினை பற்றி கருத்து வெளியிட்டுள்ளன. இப்போது தேவைப்படுவது சகல அரசியல் கட்சிகளும் ஆயுதப்போராட்டத்தை நிறுத்தி அதிகாரத்தைப் பன்முகப்படுத்துய உண்மையான அமைப்புகளை ஏற்படுத்தி தேசியமட்டத்தில் ஒரு ஒருமைப்பாட்டைக் காண்பதாகும். பாதிக்கப்பட்ட பிரதேசங்களிலுள்ள சகல மக்களதுக் குழுக்களினதும் மனித உரிமைகள் மீள அளிக்கப்படவேண்டும்

1987 ஜுலை மாத உடன்படிக்கை இலங்கையின் இறைமைக்கு தடைவரம்பு விதித்துள்ளது. மீண்டும் இதுபற்றி பேச்சுவார்த்தை இடம்பெற வேண்டும். படிப்படியாக அமைதி நிலைநாட்டப்பட்டதும் இந்திய அமைதிகாக்கும்படை படிப்படியாக விலகி வெளியேறவேண்டும். இந்தியாவும் இலங்கையும் சம பங்காளராக உடன்படிக்கை செய்துகொண்டால் வடக்கிலும் கிழக்கிலும் ஒரு தீர்வு ஏற்பட அது வழிவகுக்கலாம்.

**11. சமயம்**

முன் கூறியது போல் சமயமே நாட்டினதும் கலாசாரத்தினதும் ஆன்மாவாகும். சமூக முன்னேற்றத்தில் சமயங்களும் மனித இன நலக்கோட்பாடும் முக்கிய பங்கு வகிக்கின்றன. தனது சமயத்தை அல்லது விசுவாசத்தை வழிபாட்டிலும், அனுசாரத்திலும், நடைமுறையிலும் போதனையிலும் வெளிப்படுத்தும் சுதந்திரத்தை எமது அரசியலமைப்பு குடிமக்களுக்கு அளிக்கிறது. (இல. 10 இல. 14 c)

பாரபட்சமின்றி எல்லாச் சமயத்தவர்களுக்கும் வழிபடவும், போதிக்கவும், வாழ்வில் அனுசரிக்கவும் பூரண வசதி அளிக்கப்படவேண்டும் ஒழுக்க மதிப்பீடுகளையும், பாடசாலைகளில் கட்டுப்பாட்டையும் கொண்டுவருவதில் சமயம் எத்தகைய முக்கிய பங்கு வகிக்கிறது என்பதை மேலே கண்டோம். சமயம் ஓங்கட்டும், அப்போது பொது நலம் ஆசீர்வதிக்கப்படும்.

**12 முடிவுரை**

இந்த அறிக்கையானது சுதந்திரமான, நியாயமான தேர்தலைவலியுறுத்தும் படியாகவும், தேர்தலில் தாம் முகம் கொடுக்கவேண்டிய பிரச்சினைகள் பற்றி மக்கள் சிந்திக்க துணைபுரியும் படியாகவும் கிறிஸ்தவர்களின் தாழ்மையான பங்களிப்பாக நாட்டுமக்களுக்கு அளிக்கப்படுகின்றது. பட்சபாதத்தையும், குறுகிய கட்சி மனப்பான்மையையும் கூடியளவு தவிர்த்துள்ளோம். அரசியல் கட்சிகள் எமது ஆலோசனைகளைக்கருத்திற் கொண்டு உண்மையுடனும் நேர்மையுடனும் செயற்படவேண்டுமென வரும்புகின்றோம்.

சங்கீத ஆசிரியரின் கூற்ருேடு இதை நிறைவு செய்கிறோம்.

'இளமையுடன் திகழும் எம மக்கள, வளரும் செடிகள் போல் இருப்பார்களாக
எம் புதல்வியர் மூலைக்கற்கள் போலவும் ஆலயத்தூண்கள் போலவும் இருப்பார்களாக.
எம் களஞ்சியங்கள் நிறைந்திருப்பனவாக. எல்லாவிதத் தானியங்களாலும் நிறைந்திருப்பனவாக.
எங்கள் ஆடுகள் வயல்களில் பல்லாயிரமாகப் பெருகட்டும்
எங்கள் மாடுகளும் பலுகட்டும்.
எங்கள் ஊர்த்தெருக்களில் புலம்பல் இல்லாதிருக்கட்டும்.
இந்நலன்களை அடைந்த மக்கள் பேறுபெற்றோர்."
சங். 144: 12-15.

ஆயர்
எவ். மார்க்கஸ்பெர்னுண்டோ
சிலாப ஆயர்
இலங்கை கத்தோலிக்க ஆயர் பேரவைத் தலைவர்

வண. பிதா அன்செலம் சில்வா
அ. ம. தி.
துறவறசபை சிரேஷ்டர் பேரவைத் தலைவர்.

திரு. நியூட்டன் பெர்னுண்டோ
இலங்கை கத்தோலிக்க சங்கத் தலைவர், தேசிய கிறிஸ்தவ சங்கத் தலைவர்

கொழும்பு 11.
அக்டோபர் 1988.

## பொதுநிலையினரின ஆணைக்குழு நடாத்துய
## ஒளிவிழா சிறப்புப் போட்டிகள்

நாடகப்போட்டிக்கு விண்ணப்பம் அனுப்பவேண்டிய கடைசித்திகதி **15-11-88**

மற்றைய இரண்டு போட்டிகளுக்கும் ஆக்கங்கள் அனுப்ப வேண்டிய கடைசித்திகதி **30-11-88**

பரிசுகள் : நாடகப்போட்டி
முதலாம் பரிசு ரூபா 400/-
இரண்டாம் பரிசு ரூபா 300/-
மூன்றும் பரிசு ரூபா 200/-

வாழ்த்துமடல் போட்டி
முதலாம் பரிசு ரூபா 300/-
இரண்டாம் பரிச ரூபா 200/-
மூன்றும் பரிசு ரூபா 100/-

சுவரொட்டி வரைதல் போட்டி
முதலாம் பரிசு ரூபா 300/-
இரண்டாம் பரிசு ரூபா 200/-
மூன்றும் பரிசு ரூபா 100/-

★ தவிர்க்க முடியாத காரணத்தால் கடை சித்திகதி பின்போடப்பட்டமைக்காக வருந்துகிறோம்.
★ 23-9-88 பாதுகாவலன் காண்க.
★ நடுநிலையாளர்களின் தீர்ப்பே முடிவானதாகும்.
★ அனுப்பவேண்டிய முகவரி :
தலைவர், யா. ம. வ. பொதுநிலையினர் ஆணைக்குழு
புனித மரியன்னை பேராலயம், யாழ்நகர்.

# பாதுகாவலன்
PATHUKAVALAN

## ஜப்பானில் கருதினல் சின்

மணிலா பேராயர் கருதினல் ஜேய்ம் சின், கத்தோலிக்கரும் பிற கிறிஸ்தவர்களும் கூட்டாக விடுத்த அழைப்பின் பேரில் செப்டெம்பர் 1-ம் திகதி ஜப்பான் போய்ச் சேர்ந்தார். அங்கு 12 நாட்கள் தங்கிய கருதினல் சென்ற ஆண்டு புனிதர் பட்டம் பெற்ற பிலிப்பினோ வேதசாட்சியான புனித லொறென்சோ லூயிஸ் மரணமான நாகசாக்கி நகருக்கு யாத்திரை செய்தார். அத்துடன் ஜப்பானில் வசிக்கும் பிலிப்பினோ சமூகத்தவரை ஊக்குவித்து, ஜப்பானுக்கும் பிலிப்பைனுக்குமிடையே நல்லுறவை வளர்க்க விரும்புகிறார்.

தாய் நாட்டின் அரசியல் நிலைமைபற்றி வினவப்பட்டபோது அவர் ஜனதிபதி கொரசன் அக்வீனே பல முக்கிய பணிகளைச் செய்துள்ளமையைப் பாராட்டினர். அதே சமயத்தில் 20 ஆண்டு அடக்குமுறையின்பின் விடுதலைபெற்ற நாட்டில் ஊழலும் பயங்கரவாதமும் இன்னும் தீர்க்கப்படாத பிரச்சினைகளாயுள்ளன எனக் குறிப்பிட்டார்.

சென்ற ஆண்டு ஜப்பானில் வேலை வாய்ப்புத்தேடி 36,000 பிலிப்பினோ மக்கள் வந்தனர் ஆனல் ஜப்பான் அவர்களில் 8000பேரை வெளியேற்றியது. இது பற்றி வினவப்பட்டபோது கருதினல் சின் தாம் பிலிப்பைன் மக்கள் பிறநாடுகளுக்கு வேலைதேடிச் செல்வதை விரும்பவில்லையென்றும், இதனல் பொருளாதாரப் பிரச்சினைகள் மட்டுமன்றி சமூகப் பிரச்சினைகளும் உண்டாகின்றன என்றும் கூறினர்.

கருதினல் சின் ஜப்பானிய பிரதமர் நொபுரு தக்கேஷிற்றுவை 20 நிமிடம் சந்தித்துப் பேசினர். பட்டத்து இளவரசரையும் சந்தித்துப் பேசினர். பிலிப்பினோ மக்களின் குடும்ப விழாவன்று திருப்பலி ஒப்புக் கொடுத்தார்.

## மிருசுவில் பங்கில் செபமாலைப் பேரணி

மரியாயின் ஆண்டில் சிறப்பு நிகழ்வுகளில் மரியன்னை மிருசுவிலில் உள்ள இல்லங்களை மத வேறுபாடு எதுவுமின்றி தரிசித்து தன் ஆசிகளை வாரி வழங்கியமை குறிப்பிடத்தக்கதாக அமைந்திருந்தது. இதனை மிருசுவில் பங்கு மரியாயின் சேனைப் பிரசீடியங்கள் ஒன்றிணைந்து பங்குத் தந்தை அருட்திரு. M. M V, அமிர்தகுமார் அடிகளார் தலைமையில் ஒழுங்கு செய்திருந்தன,

இறுதிநாளன்று மாலை 4-00 மணியளவில் அன்னை மரியின் அருட்சுரூபம் புனித நீக்கிலார் ஆலயத்திலிருந்து, புனித காணிக்கைமாதா ஆலயத்திற்கு செபமாலைப் பவனியாக எடுத்துச் செல்லப்பட்டது. தொலி பேரொலியாகச் செபமாலைப் பவனி மாதா கோவிலைச் சென்றடைந்தது அன்னை இல்லங்களுக்கு யாத்திரை செய்தபோது இந்து மதச் சகோதரர் தங்கள் இல்லங்களுக்கு அழைத்து ஆசி பெற்றது மட்டுமன்றி இறுதிநாள் செபமாலைப் பவனியிலும் கலந்துகொண்டமை அன்னையின் அன்பை அனைவரும் பகிர்ந்து சுவைத்தமைக்கு எடுத்துக்காட்டாக அமைந்தது. 6-00 மணியளவில் மாதாகோவிலில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப் பட்டதுடன் பங்குத்தந்தையவர்களின் அருளுரையுடனும் திருச்சொரூப ஆசீருடனும் பேரணி முடிவடைந்தது.

## தொடர்புசாதனப் பயிற்சிநெறி

அனைத்து இந்திய கத்தோலிக்க ஆயர்சங்கம் UNDA/OCIC ஸ்தாபனங்களும் இணைந்து பூனவில் செப் 19ம் திகதி தொடர்புச்சாதன பயிற்சி நெறியை ஆரம்பித்தபோது 17 குருக்கள், 9 கன்னியர், இரு பொது நிலையினர் ஒரு தருமட மாணவன் முதலியோர் இலங்கையிலும் மற்றைய பகுதிகளிலும் இருந்து பங்கு பற்றினர்.

அனைத்து இந்திய கத்தோலிக்க ஆயர் சங்கத் தலைவர் வண. பிதா அகஸ்தீன் கனஜமாலா அவர்கள் இந்தப் பயிற்சி நெறியின் முக்கியம் பற்றி எடுத்துக் கூறினர். லண்டனைச் சேர்ந்த பேராசிரியர் ஜேம்ஸ் கீகன் அவர்கள் இப்பயிற்சியை நெறிப்படுத்தினர்.

## குளமங்கால் பங்கில் புதுநன்மை விழா

சென்ற 30-10-88ல் எமது குளமங்கால் கிராமமே விழாக் கோலம் பூண்டிருந்தது. பார்க்கும் ஒவ்வொருவர் முகத்திலும் பரவச உணர்வு! பக்திமனது!!

காரணம் – எம் ஊர்ச் சிறுர்கள் 28 பேர்கள் முதல் தடவையாக நற்கருணை நாதரைத் தமது உள்ளங்களில் ஏற்று வரவேற்றுர்கள்!

இதற்கு வேண்டிய ஆயத்தங்களை கடந்த 3 மாதங்களாக மரியாயின்சேனை அங்கத்தவர்கள் செய்தனர்.

இதில் முக்கிய அம்சம் என்னவென்றல் - வழிபாட்டிற்கு வேண்டிய அனைத்து ஒழுங்குகளையும் புதுநன்மைச் சிறுர்களே ஒழுங்குபடுத்திச் சிறப்பித்தமை ஆகும்.

குறிப்பாக, பங்குத் தந்தையை ஆராத்தி எடுத்து, பொட்டிட்டு, மாலை சூட்டி சிறுர்களே அவரைப் பீடத் தண்டை அழைத்துச் சென்றுர்கள்.

குரு ஒவ்வொருவரையும் பெயர் சொல்லி அழைத்தபோது, அழைப்பின் குரல் கேட்டு, "இதோ வருகிறேன்" என்று பெருமிதத்துடன் தங்கள் கைகளிலுள்ள எரி திரிகளால் சுற்றி உள்ள விளக்குகளுக்குத் தீபமிட்டு தாங்கள் இறைவனுடன் ஒன்றிப்பதை செயல் மூலம் காட்டினுர்கள்.

பங்குத்தந்தை அருள்திரு. யோகராஜா அடிகளார் தமது மறையுரையில், எம் ஒவ்வொருவருக்கும் பலவித 'பசிகள்' உண்டெனவும், அவை உடற்பசி, அன்புப்பசி, பரிவுப்பசி, அறிவுப்பசி போன்றவை எனவும் அனைத்திற்கும்மேலாக 'ஆன்மபசி' உள்ளவர்களாக நாம் ஒவ்வொருவரும் வாழ வேண்டும் என்றும் விரித்துக் கூறினர்.

"முடிவில்லாத வாழ்வின் உணவை உண்ண உண்ண நாம் அனைவரும் உருமாற்றம் பெற்று, 'உலகப்பசிகள்' நீக்கப்பட்டுவிடும்.

இன்று பிள்ளைகள் மட்டுமல்ல பெற்ரேரும், ஞானப்பெற்ரேரும், ஏன்? நாம் ஒவ்வொருவருமே அன்று பெற்றுக்கொண்ட புதுநன்மைத் தினத்தை இன்று நினைவிற் கொள்வோம், எமது வாழ்வையும் இன்று புதுப்பித்துக் கொள்வோம்" என்று அறிவுரை கூறினர்.

புதுநன்மைச் சிறுர்கள் ஒன்றுகூடி நற்கருணை நாதரை ஆராத்தி எடுத்து, மலர்தூவி அஞ்சலி செலுத்தினுர்கள்.

திருப்பலி முடிவில் பங்குத் தந்தை சிறுவர்களைப் பயிற்றுவித்த மரியாயின்சேனை அங்கத்தவர்களுக்கும், வழிபாட்டு நிகழ்ச்சிகளை அர்த்தத்துடன் சிறப்பித்த பங்கு மறை ஆசிரியை செல்வி லூசியா யோவேலையும் பாராட்டி நன்றி கூறினர்.

முடிவில் சிற்றுண்டியுடனும் பங்குத்தந்தையின் அன்பளிப்புடனும் எமது விழா இனிதே நிறைவேறியது.

தகவல்:- செல்வி இ. ஜான்சி

## மாணவர் வழிபாடு

மன்/வங்காலை புனித ஆனுள் மகாவித்தியாலயப் புதிய கட்டிடம் ஆலயத்துக்குத் தூரத்தில் உள்ளதால் இறைவழிபாடு செய்வதற்கு ஆசிரியர்கள், மாணவர்கள் மிகவும் சிரமப்பட்டார்கள். இக்குறையைத் தீர்ப்பதற்கு அதிபரும் ஆசிரியர்களும் பெரு முயற்சிகள் எடுத்து 21-10-88 வெள்ளிக்கிழமை காலையன்று 9 மணிக்கு நிறைவு கண்டார்கள். மிகவும் பொருத்தமாகச் சிறுவர்களின் கல்வி வளர்ச்சிக்கும் விசுவாச உணர்வுக்கும் ஊட்டமளிக்கத்தக்கதாக புனிதமரியாள் தன் அன்னை புனித அன்னம்மாளின்

சுரூபம் குரு பீடத்துவத்துக்கு எடுத்துக் காட்டாகவும், உறவைவளர்ப்பதாகவும் உள்ளது பெருமைக்குரியது. இரு அன்னையர்களும் இணைந்த எழிலுருவம் கிறிஸ்துவைச் சிறுவருள்ளங்களில் உருவாக்க நிச்சயம் வழிவகுக்கும். புனித ஆனுள் ம. வி. மாணவர் எல்லாத்துறைகளிலும் திறம்படப் பணி செய்ய ஊக்கம் அளிக்கும். "எவ்வளவுதான் நாம் கூரிய அறிவினைப் பெற்றுப்பட்டங்கள், பதவிகள் பெற்றிடினும் சீரியஒழுக்கம் — ஆன்மீகம் வளராவிடின் நாம் அனைவரும் காட்டு மரங்களை ஒத்தவரே. எனவே மாணவர் மனத்தினை

ஆயிரத்துக்கு மேற்பட்ட சிறுவர் சிறுமியர் 'அருள்நிறை மரியே வாழ்க' என வாழ்த்தொலிக்க, பாடசாலை 'பேண்ட்' வாத்தியக்குழு பக்திக்கீர்த்தனைகள் இசைக்க, சாரணர் கௌரவ மரியாதை செலுத்த, உயர்தர மாணவ மாணவிகள் தீப, தூப, மலர் அஞ்சலி செய்ய, வெண்ணுடைஅணிந்த ஆசிரியர்கள், அருட் சகோதரர்கள், பங்குத்தந்தையர் பின் தொடர அலங்கார பீடத்தில் இரு அன்னையர் உருவங்களும் எழுந்தருளப் பக்திப் பரவசமூட்டும் வகையில் நீண்டபவனி ஆலயத்திலிருந்து மகாவித்தியாலயம் நாடி வந்ததே பெரும் விசுவாச உணர்வூட்டும் கண்காட்

எடுத்துச் செல்லப்பட்டது. கோவில் மணிகள் ஆர்ப்பரிக்க, மரியாயின் சேனையினர் பிரசீடியக் கொடிகளுடன் அணி வகுத்து முன்செல்ல, பாடகர்கள் 'போய்வருவீர் அம்மா— பூங்கர ஆசிதந்து,' எனப் பண் இசைக்க பக்தர்சள் ஆனந்தக் கண்ணீர் மல்க பவனி ஆரம்பமாகியது.

அலங்கரிக்கப்பட்ட வீதியினூடாகப் பவனி சென்று கொண்டிருந்தபோது, வீதிகள் தோறும் இல்ல வாயிலில் தலைவியர் நின்று மாதாவிற்கு மலர்மாலை அணிந்து தீப தூப ஆரத்தி எடுத்து வழி அனுப்பினர். சிறுமியர் மலர் தூவியபடியே அழைத்துச் செல்ல அடியார்களின் 'அருள்நிறை மரியே வாழ்க' என்ற வாழ்த்

வடைந்தது.

கிளிநொச்சி மறைவட்ட
கியூறியாத் தலைவி

அன்னை புனித அன்னம்மாளிடம் கேட்டுக்கற்பதுபோன்று தத்ரூபமாய் அமைந்த அழகுச்

எனவே மாணவர் மனத்தினை அங்கிங்கு அலையவிடாது, தம்மை ஒறுத்து உருக்கித் துன்பங்களை ஏற்றுத் தான் நல்ல உருவங்களாக — போற்றுதற்குரிய நற்பிரசைகளாக உருப் பெறமுடியும். இவற்றை இறைவன் நமக்கருள பாதுகாவலியாம் புனித அன்னம்மாள் வழியாக இரந்து கேட்போம்." எனத் திருச்சுரூபத்தை தாபித்த பங்குத்தந்தை அருள் திரு, P. அருள்நாதன் அடிகள் அறிவுரை வழங்கினர்கள்.

வாச உணர்வூட்டும் கண்காட்சியாக அமைந்தது. 'பன்னிரு மன் குலத்துதித்த பரம ஞான' என்ற பதிகம் மும்முறை பாடப்பட்டு மன்னிப்பு வேண்டி அன்னையின் திருச்சுரூபம் தாபிக்கப்பட்டது. முடிவில் கொத்தணி அதிபர் திரு அ. செபமாலை அவர்கள் நிகழ்ச்சியைத் திறம்பட நடத்த உதவிய அனைவர்க்கும் நன்றி கூறினர்கள்.

V. A. ஜெம்பேட்

## உயிலங்குளத்தில் புனித திரேசா மன்றத்தினர்

கடந்த 03.10.88 அன்று உயிலங்குளப் பங்கிலுள்ள பாலைக்குழி காத்தாங்குளத்தில் புனித சின்னத் திரேசாவின் திருவிழாவைச் சிறப்பிக்கும் முகமாக காலை 9.00 மணியளவில் புனித திரேசா மன்றத்தைச் சேர்ந்த யுவதிகளும் இளம் சிறுமிகளும் இணைந்து இவ்விளையாட்டுப் போட்டியை நடாத்தினர். இதற்கு மன்றத்தின் தலைவி செல்வி அ. நெசில் சுவாஜி தலைமை தாங்கினர். விளையாட்டுப் போட்டி முற்பகல் 11.00 மணியளவில் முடிவடைந்தது பின்பு திருவிழாத் திருப்பலி மாலை 5.00 மணிக்கு ஒப்புக்கொடுக்கப்பட்டது.

திருப்பலி முடிவடைந்த பின் விளையாட்டுப் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு பங்குத்தந்தை அருள் திரு ஸ்ரனி அன்ரனி பரிசில்களை வழங்கினர். பின்னர் மன்றத்தின் செயலாளர் செல்வி ச. டெனிற்ரும்மாவின் நன்றியுரையுடன் திருவிழா சிறப்பாக இனிதே முடிவுற்றது.

தகவல் தொகுப்பு:-
கி. பாஸ்கரன்
காத்தாங்குளம்.

## திருவழிபாட்டு நாட்காட்டி—1989

1989ஆம் ஆண்டுக்கான, நாட்காட்டிகள் தயாரிக்கப்படுகின்றன.

**பிரதி ஒன்றின் விலை ரூபா 15/-**

★ கோவில்கள், தாபனங்கள் தொடர்பான விபரங்கள் வெளியிட விரும்புவோர் 10-11-1988க்கு முன் விளம்பரம் ஒன்றுக்கு 10/- வீதம் செலுத்தியனுப்புக.

★ நாட்காட்டி தேவைப்படுவோர் தொகையைக் குறிப்பிட்டு 15-11-1988க்கு முன் அறியத்தர வேண்டும்,

இப்பத்திரிகை திரு நீக்கிலஸ் யேம்ஸ் அவர்களால் உரிமையாளருக்காக யாழ்ப்பாணம். புனித வளன் கத்தோலிக்க அச்சகத்தில் 1988-ம் ஆண்டு நவம்பர் மாதம் 4 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

**உன்னை மீட்கவும் விடுவிக்கவும் நாம் உன்னோடிருக்கிறோம் என்கிறார் ஆண்டவர்**